Vijey විජය
# விஜய்
14.05.2014 - மலர் 11, இதழ் 11



## வாயு பலூனில் மனிதன் பறந்த வரலாறு



## யார் இந்த 'சாமுராய்'...?

PUBLIC LIBRARY
JAFFNA.

விலை ரூபா 15/-

நோய்க்கு மருந்தாகும் கரப்பான் பூச்சி...

நற்பண்புகளை கற்பிக்கும் ஆசிரியர்கள்...


வியப்பாக சிரிக்கும் 'ஹைனா' விலங்கு

வேற்றுக்கிரக வாசிகள் கட்டுக்கதையாம்!

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

ISSN 1391-9504

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






01) இந்த இடம் குறிப்பது;

1. காடு
2. விலங்கினக்காட்சிசாலை
3. பறவைகள் சரணாலயம்

02) இங்கு நீங்கள் காணக்கூடிய விலங்கினங்கள் யாவை?

..................................................

03) இங்குள்ளவற்றில் உயரமான விலங்கினம் எது?

..................................................



01) இங்குள்ள தொப்பிகள் எத்தனை?

..................................................

02) அவை எத்தனை வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.



1. மூன்று
2. இரண்டு
3. எல்லாம் ஒரே மாதிரியானவை



03) தொப்பியின் பயன்பாடுகள் 2 தருக.

..................................................

04) என்னென்ன நிறங்களிலான தொப்பிகள் உள்ளன?

..................................................

01) இங்குள்ளவர்கள் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்கள்?

1. கிரிக்கெட்
2. கூடைப்பந்து
3. கால்பந்து


02) எத்தனை பந்துகள் உள்ளன?

..................................................



03) இந்த விளையாட்டை ஆங்கிலத்தில் எவ்வாறு அழைப்பர்?

..................................................



01) கீழுள்ள சொற்களை உரிய படங்களுக்கு அருகில் எழுதுக.

carrot, potato, apple, peas, pumpkin, orange, grapes, lemon, eggplant, onion, strawberry, cherries

02) 'onion' என்பதன் தமிழ்ச் சொல் யாது?

..................................................

03) இங்குள்ளவற்றில் உங்களுக்கு விருப்பமான ஏதேனுமொரு பழம் மற்றும் மரக்கறியின் பெயர்களைத் தருக.


பழம் - ..................................................

மரக்கறி - ..................................................

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk





# டைட்டனின் ரகசியத்தைக் கண்டறியவுள்ள 'ட்ரோன்' விமானம்

சனிக் கிரகத்தின் துணைக்கோள்களில் ஒன்றான டைட்டன் துணைக்கோளின் ரகசியங்களைக் கண்டறிய, அமெரிக்காவின் நாஸா நிறுவனமானது, விமானிகள் அற்ற ட்ரோன் விமானம் ஒன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 'ஏவியேட்டர்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ட்ரோன் விமானம், அமெரிக்காவின் அயிடஹோ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப விஞ்ஞானியான ஜேம்ஸ் பார்ன்ஸ் உட்பட, 30 பேர் அடங்கிய குழுவினரின் படைப்பாக அமையவுள்ளது.

இந்த ட்ரோன் விமானத்தைத் தயாரிப்பதற்கான செலவு 15 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். மேலும், இந்த விமானத்தினை சனிக் கிரகத்தின் டைட்டன் துணைக்கோளை நோக்கி அனுப்பவும் அங்கு ஆய்வுப்பணிகளை முன்னெடுக்கவும் செலவாகும் முழுத் தொகை 715 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று நாஸா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

சனிக் கிரகத்தின் டைட்டன் துணைக்கோளானது, பூமியின் துணைக்கோளான சந்திரனைவிட அளவில் பெரியதாகும். மேலும், இது புதன் கிரகத்தைவிட அளவில் பெரிதானது என்றே வானியல் அறிஞர்கள் கூறுகின்றனர். இந்த டைட்டன் துணைக்கோளானது, பல்வேறுபட்ட மர்மங்களைத் தன்னகம் கொண்டுள்ளது. இந்த மர்மங்களை துலங்கிக்கொள்வதற்கு இதுவரை விஞ்ஞானிகளுக்கு வாய்ப்புக் கிட்டவில்லை. டைட்டனின் மேற்பரப்பு வெப்பநிலை (-178)$^0$C முதல் 178$^0$C வரையாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுவதாலும் அடர்த்தியான முகில் கூட்டங்கள் நிறைந்த வளிமண்டலம் டைட்டனில் காணப்படுவதாலுமே, டைட்டனில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஆளில்லா விமானமான ட்ரோன் விமானத்தினைப் பயன்படுத்துவது பொருத்தமானது என்று விஞ்ஞானிகள் தீர்மானித்தனர். அடர்த்தியான முகில் கூட்டங்களையுடைய டைட்டனின் வான்பரப்பில் நீண்ட காலம் தரித்திருந்து ஆய்வுகளை முன்னெடுக்க இந்த ட்ரோன் விமானத்தால் முடியும் என்று நாஸா விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.





ப்ளுட்டோனியம் எரிசக்தியில் இயங்கும் ஏவியேட்டர் எனும் இந்த ட்ரோன் விமானத்தின் நிறை 120 கிலோகிராமாகும். இதில் பொருத்தப்படவுள்ள சிறப்பு வாய்ந்த கெமராக்களினூடாக டைட்டனின் முப்பரிமாணப் புகைப்படங்களை எடுக்கவும் முடியும். ஏவியேட்டரின் பிரதான நோக்கம்; டைட்டனின் பௌதிக வேறுபாடுகளை இனங்காண்பதாகும்.



வான்பரப்பு நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், டைட்டன் துணைக்கோளின் மேற்பரப்பில் தரையிறங்கி-மண் மாதிரியினைப் பெற்று-ஆய்வுகளை மேற்கொள்ளவும் ஏவியேட்டர் திட்டத்தின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாஸா ரொக்கெட் மூலமே இந்த ட்ரோன் விமானம் காவிச் செல்லப்படவுள்ளது. ரொக்கெட் கெப்சியூலினுள் பொருத்தப்படவுள்ள இந்த விமானம், டைட்டன் வளிமண்டலப் பகுதிக்குள் பிரவேசித்ததும் தனது ஆய்வுப் பணிகளை ஆரம்பித்துக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

-அஷ்வீதா


| 'விஜய்' பத்திரிகையை வீட்டிற்கே பெற்றுக்கொள்ள | 1 வருடத்திற்கு | 6 மாதங்களுக்கு |
|---|---|---|
| கொழும்பு | ரு 780/= | ரு 390/= |
| கொழும்புக்கு வெளியே (தபாலில்) | ரு 1560/= | ரு 780/= |

கட்டணம் செலுத்தும் முறை:

- நேரடியாக செலுத்த முகவரி:- Subscription Division, Wijeya Newspapers Ltd. No-08, Hunupitiya Cross Rd, Colombo-02
- காசுக்கட்டளை (Money Order):- பெறுபவர் பெயருக்கு Slave island post office என குறிப்பிட்டு குறித்த காசுக்கட்டளை சிட்டையை பதிவுத் தபாலில் அனுப்பவும்.
- காசோலை (check):- Wijeya Newspapers என்ற பெயருக்கு காசோலை எழுதப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய முகவரி: (பதிவுத் தபாலில்) - Subscription Manager, Tamil Vijei No-08, Hunupitiya Cross Rd, Colombo-02,

தொ.பே.இல: - 011-2307789, 0773710291

வெளிநாட்டிற்கு -Foreign
(1 வருடத்திற்கு)

| Countries | Amount (Sri lankan Rupees) |
|---|---|
| India | 4940.00 |
| Malaysia, Singapore, Oman, Thailand | 5200.00 |
| Saudi Arabia, Kuwait, Bahrain, U.A.E Brunei, Qatar | 5460.00 |
| Australia, Libiya, Malta, Sweden | 6916.00 |
| Britain, Denmark, France, Germany Italy, Netherland, Norway | 8060.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசல் குருவி

முன்னொரு காலத்தில் அழகாபுரி என்னும் நாட்டை பலம்வாய்ந்த அரசர் ஒருவர் ஆண்டு வந்தார். அவர் தனது தோட்டத்தில் விதவிதமான செடிகளையும், மரங்களையும் வளர்த்து வந்தார். அவர் வளர்த்து வந்த மரங்களில் ஒன்றில் அழகான குருவி ஒன்று கூடு கட்டி வசித்து வந்தது. பகலில் உணவைத் தேடி அலையும் அக் குருவி, இரவில் தன் மென்மையான குரலில் இனிமையாகப் பாடி வந்தது. குருவி பாடும் பாட்டு அரண்மனையை சுற்றி இருந்தவர்களை மட்டும் அல்லாது, அண்டை நாட்டு வழிப்போக்கர்களையும் மகிழ்வித்து வந்தது. குருவியின் இனிமையான குரலைப் பற்றிக் கேள்விப்பட்ட அரசர், குருவியைப் பிடித்து ஒரு கூண்டில் அடைத்து இது இனி அரண்மனை மண்டபத்தில் மட்டும் தான் பாட வேண்டும் என்று கட்டளையிட்டார். குருவியும் வேறு வழி தெரியாமல், அரசருக்குப் பயந்து, அரண்மனையில் இருந்து பாடியது.

ஒருநாள் குருவி ஒரு இனிமையான பாடலைப் பாடி அரசரின் கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீரை வரவழைத்துவிட்டது. குருவியின் இனிமையான குரலில் இருந்து வரும் பாடலை அரசர் மட்டும் கேட்டு அனுபவிக்காமல், தன்னைச் சுற்றி இருந்த நாட்டின் அரசர்களையும் தனது நாட்டுக்கு வரவழைத்தார். அவர்கள் அக் குருவியின் குரலில் இருந்து வரும் இனிமையான பாடலைக் கேட்டு மகிழும்படி செய்தார். இனிமையான குரலால் அனைவரையும் மகிழ்வித்த குருவி, விரைவாகவே அரண்மனைப் பாடகியாக மாறி விட்டது.



ஒருநாள் வெகு தூரத்து தேசம் ஒன்றில் இருந்து வந்த ஒரு வியாபாரி, உலோகத்தால் உருவாக்கப்பட்ட குருவி ஒன்றை அரசருக்குப் பரிசாக அளித்தான். அந்த குருவியின் உடல் முழுவதும் ரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டு, மின்னிக்கொண்டிருந்தன. அந்தக் குருவியை ஏதாவது ஓர் இடத்தில் தொட்டால், அது பாட ஆரம்பிக்கும். அந்த உலோகத்தால் ஆன குருவியும் உயிர் உள்ள குருவியைப் போலவே பாடி, அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கச் செய்தது. மக்கள் உலோகக் குருவியின் பாடலையும், உயிர் உள்ள குருவியின் பாடலையும் மாறி, மாறிக் கேட்டு மகிழ்ந்தனர்.

உலோகக் குருவியில் இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்ததால்,அது வெகு நேரம்வரை களைப்பில்லாமல் பாடி, அனைவரையும் மகிழ்வித்து வந்தது. உயிருள்ள குருவியோ சிறிது நேரம் பாடிவிட்டு களைப்பில் பாடலை நிறுத்திவிடும். நாளடைவில் உயிருள்ள குருவியை விட உலோகக் குருவி மக்கள் மத்தியில் பெருமையாகப் பேசப்பட்டது. மக்கள் உலோகக் குருவியையே அதிகம் நாடிச் சென்றனர். இதைப் பார்த்து மன வேதனை அடைந்த உயிர் உள்ள குருவி அரண்மனையை விட்டுப் பிரிந்து வெகு தூரத்தில் இருந்த ஒரு தேசத்துக்குச் சென்றது. அரசரும் அதுகுறித்துக் கவலைப் படவே இல்லை.

ஒருநாள் அரண்மனையில் உலோகத்தால் ஆன குருவி பாடிக்கொண்டிருந்தபோது, திடீரென பெரிய ஒரு சத்தம் கேட்டு அதிர்ச்சி அடைந்தனர். அத்தோடு குருவியின் பாடலும் நின்றுவிட்டது. எவ்வளவோ முயற்சித்தும் அதனை பாடவைக்க முடியவில்லை. உடனே அரசர் உலோகக் குருவியை பாட வைப்பவர்களுக்கு தக்க சன்மானம் தரப்படும் என்று அறிவிக்கும்படி தன் சேவகர்களுக்கு கட்டளையிட்டார். ஆனால், எவ்வளவு முயற்சித்தும் அதனை பாட வைக்க எவராலும் முடியவில்லை. இதனால் மன உளைச்சலுக்கு உள்ளாகிப் போன அரசர் ஒரு மூலையில் முடங்கி விட்டார். அவரால் தனது வேலைகள் எதனையும் செய்ய முடியவில்லை. நாளுக்கு நாள் அவரின் நிலமை மோசமாகவே மாறியது.

ஒருநாள் அவர் உறங்கிக் கொண்டிருந்த வேளை அருகில் இருந்த ஒரு மரக்கிளையில் இருந்து நீண்ட நாள் பழகிய ஒரு குருவியின் இனிமையான பாடல் கேட்டது. அப் பாடலைக் கேட்ட அரசர் மன உளைச்சலில் இருந்து மீண்டார். புத்துணர்ச்சி பெற்று இனிய பாடல் வந்த திசையை உற்றுப் பார்த்தார். அங்கே ஒரு குருவி அமர்ந்திருப்பதைக் கண்டு தன் அரண்மனையில் இருந்து காணாமல் போன குருவிதான் என்பதை அரசர் உணர்ந்தார். தன்னுடைய அரண்மனையில் இனிமையான குரலால் பாடித் தன்னை மகிழ்வித்த உயிர் உள்ள குருவி மீண்டும் வந்ததைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தார்.

அரசர் அக் குருவியைப் பார்த்து, "என் அன்பிற்கினிய குருவியே! எது உண்மை? எது பொய்? என்று உணர்ந்து கொள்ள முடியாமல் போன என்னை மன்னித்துவிடு... உலோகக் குருவியின் வெளித் தோற்றத்தைக் கண்டு உன்னை உதாசீனப் படுத்திவிட்டேன். உண்மை எப்போதும் ஜெயிக்கும். உலோகக் குருவி நீண்ட நேரம் இடைவெளி இன்றிப் பாடியதால் அது செயலிழந்து போய்விட்டது. இனி எங்கும் நீ செல்லவேண்டாம். என்னுடனேயே அரண்மனையில் இருந்துவிடு" என்று அன்பு ததும்பும் வார்த்தைகளால் கூறினார். குருவியும் மகிழ்ச்சியுடன் அரசருடனேயே தங்கிவிட்டது.

# கிணற்றுத் தவளை



ஏரி நிறைந்து வழியும் அளவுக்கு மழை பெய்து நீர் முழுவதும் குளிர்ச்சி அடைந்துவிட்டது. அந்தக் குளிரைத் தாங்க முடியாத ஒரு தவளை, மழை ஓய்ந்ததும் சற்று தூரத்திலுள்ள ஒரு கிணற்று நீர் வெதுவெதுப்பாக இருக்கும் என்று எண்ணி அக் கிணற்றுக்குள் குதித்தது. அந்தக் கிணற்றில் பல காலமாக வாழ்ந்து வந்த தவளைகளில் ஒன்று அந்தப் புதிய தவளையை வரவேற்றது. "நான் வெகு நாட்களாகப் பேச்சுத் துணைக்குக்கூட ஆளில்லாமல் தவித்துக் கொண்டிருந்தேன். உன்னைக் கண்டது எனக்கு மிக்க மகிழ்ச்சி" எனக் கூறி தனது பொந்தில் வைத்திருந்த உணவு வகைகளைப் புதிய தவளைக்குக் கொடுத்தது.

இரண்டு தவளைகளும் பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்த ஏனைய தவளைகளுக்கு புதிய தவளையின் வரவு பிடிக்கவில்லை. 'இங்கே கிடைக்கும் உணவு நமக்கே போதவில்லை, இதில் புதிய விருந்தாளி வேறு' என்று தமக்குள் கூறிக்கொண்டன. புதிய விருந்தாளியை எப்படியும் துரத்திவிட அந்த தவளைகள் முடிவு செய்தன.

இரண்டு தவளைகளும் சுவாரசியமாகப் பேசிக்கொண்டிருப்பதை அருகே சென்று வேடிக்கை பார்த்த ஏனைய தவளைகளில் ஒன்று புதிய தவளையிடம் "நண்பனே! நீ இத்தனை நாளும் எங்கே தங்கியிருந்தாய்?" எனக் கேட்டது. "நான் ஓர் ஏரியில் தங்கியிருந்தேன்" என்றது புதிய தவளை. "ஏரியா? அப்படியென்றால் என்ன?" என்று கேட்டது கிணற்றுத் தவளை.

"இந்தக் கிணற்றைப் போன்று பல மடங்கு பெரிய நீர் நிலை. அதில் மீன், ஆமை, முதலை ஆகியவைகள் உள்ளன" என்றது புதிய தவளை. "அந்த ஏரியில் அவ்வளவு உயிரினங்கள் இருக்கின்றனவா? என்று கேட்டது கிணற்றுத் தவளை. "ஆம் இந்தக் கிணற்றைவிட பெரிய ஏரியில் அவ்வளவு உயிரினங்கள் உள்ளன" என்றது புதிய தவளை.


ஆனால், கிணற்றுத் தவளைகள் அதை நம்பவில்லை. "நண்பா! நீ பொய் சொல்கிறாய். இந்த கிணற்றைவிட பெரிய நீர்நிலை உலகத்தில் வேறு இருக்க முடியாது" என்றது கிணற்றுத் தவளைகளில் ஒன்று. புதிய தவளை எவ்வளவோ எடுத்துக் கூறியும் கிணற்றுத் தவளைகள் அதனை நம்பவில்லை.

எல்லாத் தவளைகளும் புதிய தவளையைப் பார்த்து "நீ பொய்யன், புரட்டன், உனக்கு தங்க இங்கே இடம்கொடுத்தால் எங்களுக்கு ஆபத்து" என்று கூறி புதிய தவளையைத் தாக்க முயன்றன. அப்போது, கிணற்றில் நீர் எடுக்க ஒருவர் வாளியை உள்ளே விட்டபோது, அதனுள் தாவி ஏறிய புதிய தவளை, தண்ணீருடன் மேல்நோக்கிச் சென்று தாவிக் குதித்து மறுபடியும் ஏரிக்கே சென்றுவிட்டது.

முட்டாள்களிடம் வாதாடுவதைவிட அவர்களிடமிருந்து ஒதுங்கிச் செல்வதே சிறந்தது என தவளை தன்னுள் எண்ணிக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படிக்கும் மேசைக்கு அருகில் ஒரு ஜன்னல்...

உளவியல் விஞ்ஞான கருத்தின்படி, நாம் பாடம் படிக்கும் மேசைக்கு முன்பாக ஜன்னல் ஒன்று இருப்பது எமது ஞாபகசக்தியை அதிகரிக்கும் என்று கூறப்படுகின்றது. அவ்வாறு இல்லாவிடின், ஆழமான கருத்தை வெளிப்படுத்தக் கூடிய படக்காட்சியொன்றேனும் இருப்பது நன்று எனத் தெரிவிக்கப்படுகின்றது.


எனினும், நீங்கள் பாடம் படிக்கும் மேசையானது, நீங்கள் எந்தவொரு காட்சியையேனும் பார்க்க முடியாதவாறு, வெறும் சுவரைப் பார்த்துக் கொண்டு படிக்கும் வகையில்தான் அமைந்திருக்குமானால், மேலே கூறியது போன்று அதனை உங்கள் ஞாபகசக்தியை அதிகரித்துக்கொள்ளக் கூடியவாறு மாற்றிக் கொள்ளும்வகையில், ஒரு ஜன்னலை நீங்களே உருவாக்கிக் கொள்ள முடியும். இது எப்படி சாத்தியமாகும் என்பதை இங்கு பார்ப்போம்.


**தேவையானவை:**

* நிறக்கடதாசி (அதாவது, ஒருபுறம் வெள்ளையாகவும் மறுபுறம் ஏதேனுமொரு நிறத்திலும் காணப்படும் நிறக்கடதாசி)
* bristol board-1
* கத்தரிக்கோல்
* கம்
* கம் டேப்


**செய்முறை:**

* முதலில், எல்லா நிறக்கடதாசிகளையும் சதுர வடிவில் கத்தரிக்கோலால் வெட்டிக்கொள்ளவும். (சதுரங்கள் மிகவும் சிறியதாக இருக்கக் கூடாது)
* பின்னர், 1 ஆம் இலக்கமிட்டுக் காட்டப்பட்டுள்ள படத்தில் உள்ளவாறு நிறக்கடதாசியின் வெள்ளைப் பக்கம் உள்ளே இருக்குமாறு குறுக்




காகவும் நெடுக்காகவும் நான்காக மடித்து, நடுப்பகுதியில் விரலால் அழுத்திவிடுங்கள். இவ்வாறு மடிப்பதனால், 2 ஆம் இலக்கமிடப்பட்டுள்ள படத்தில் உள்ளது போன்று கடதாசியின் நடுவில் கூட்டல் குறியீடு போன்ற ஓர் அடையாளம் தென்படும்.
* அதன் பின்னர், 3 ஆம் இலக்கமிடப்பட்டுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு, கடதாசியின் நான்கு மூனைகளும் நடுப்பகுதியைத் தொடும் வகையில் மடியுங்கள்.
* இவ்வாறு பல்வேறு நிறக்கடதாசிகளில் இருந்து வெட்டப்பட்ட சதுரங்களையும் மடித்துக்கொண்ட பின்னர், 4 ஆவது படத்தில் காட்




டப்பட்டுள்ளவாறு அவை அனைத்தையும் bristol board இல் 'கம்' கொண்டு வரிசையாகவும் அழகாகவும் ஒட்டுங்கள்.
* இப்பொழுது நீங்கள் நிறக்கடதாசியிலான அலங்கார ஜன்னலொன்றை உருவாக்கிவிட்டீர்கள்!




அதனை கம் டேப்பினால் சுவரில் ஒட்டுங்கள்.

**ஒரு சிறிய ஆலோசனை....!**

* கடதாசியின் நிறங்களைத் தெரிவுசெய்யும்போது, நீங்கள் சுயமாக சிந்திக்கலாம். நிற ஒழுங்கமைப்பானது, ஒரு பாணியில் வரிசைக் கிரமமாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால், அப்பகுதி அழகாகத் தோற்றமளிக்காது. நிறக்கடதாசிகளை வெட்டி ஒட்டும்போதும் அதனை நேர்த்தியாக செய்யுங்கள். அப்பொழுதுதான் மனத்திருப்தியும் உரிய பிரதிபலனும் கிடைக்கும்.

-பி







# பயிற்சி நெறியும் விருது விழாவும்

'சிமாட் ஒஃப் ஸ்ரீ லங்கா' அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தலைமைத்துவமும் கால முகாமைத்துவமும் எனும் தலைப்பின்கீழ் இளைஞர், யுவதிகளுக்கான பயிற்சி நெறியும் விருது வழங்கும் விழாவும் அண்மையில் சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றன.

இளைஞர் நாடாளுமன்றத்தின் சகவாழ்வு பிரதியமைச்சரும் சாய்ந்தமருது பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரும் சிமாட் ஒஃப் ஸ்ரீ லங்கா அமைப்பின் தலைவருமான ஏ.எல்.எம்.றிஸான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திசாநாயக்க கலந்துகொண்டார்.

இதன்போது, அமைப்பின் பொதுச் செயலாளர், அமைப்பின் அங்கத்தவர் ஆகியோர் சிறந்த சேவைக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், தலைமைத்துவமும் கால முகாமைத்துவமும் எனும் தலைப்பில் இடம்பெற்ற பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த 250 இளைஞர், யுவதிகள் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஆரிப் சம்ஸுதீன், கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.டபிள்யூ.ஏ.கபார், கொழும்பு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பரிசோதகர் பாரூக், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளரும் சம்மேளனத்தின் மூத்த உறுப்பினரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.ஏ.பஹுர்தீன், சிமாட் ஒஃப் ஸ்ரீ லங்கா அமைப்பின் பொதுச் செயலாளர் றிஸ்கான் முஹம்மட் உட்பட, கல்வியாளர்கள், புத்திஜீவிகள், இளைஞர்-யுவதிகள், பிரமுகர்கள் என பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யார் இந்த

பழங்காலத்தில் ஜப்பானில் வாழ்ந்த இராணுவ சிப்பாய்களே 'சாமுராய்கள்' என்று அழைக்கப்பட்டனர். 'நாட்டுக்குச் சேவை செய்ப வர்கள்' என்பதே 'சாமுராய்' என்பதன் அர்த்தம். அவர்கள் பிற்காலத்தில் ஜப்பானின் ஆட்சி அதிகாரங்களிலும் பங்களிப்புச் செய்தனர். ஜப்பானின் குறிப்பிட்ட சில யுகங்களில் சமுதாயத்தின் மிக உயர்ந்த இடத்தை சாமுராய்கள் வகித்தனர். வில், அம்பு, ஈட்டி, துப்பாக்கி என்பன அவர்கள் கையாண்ட ஆயுதங்களாகும். எனினும், சாமுராய்கள் வசம் இருந்த ஆயுதங்களில் மிகவும் முக்கியமானதும் குறியீட்டு ஆயுதமாக வும் திகழ்ந்தது 'வாள்' ஆகும்.

அக்காலத்தில் ஜப்பானில் ஆட்சிபுரிந்த மத்திய அரசின் ஆணைகளுக்கு அடிபணியாத செல்வந்த நில உரிமையாளர்கள் தமது தனிப்பட்ட பாதுகாப் பிற்காக கூலிப் படைகளை உருவாக்கி, தமக்கென தனிப்பட்ட இராணு வத்தை அமைத்துக்கொண்டனர். இவர்களிடையே மிகவும் பலம் வாய்ந்ததாக 'மினமொட்டோ' மற்றும் டைரா எனும் இரு நிலவுடமை சமூகக் குழுக்கள் திகழ்ந்தன. பிற்காலத்தில் இவர்கள் மத்திய அரசுக்கு அச்சுறுத்தலாக மாறியதோடு, நாட்டின் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு எந்நேரமும் யுத்தம் புரிந்தனர். இந்த யுத்தத்தில் வெற்றி பெற்ற மினமொட்டோ குழுவினர் கி.பி 1192 இல் புதிய இராணுவ அரசை நிறுவினர். அதன்பின் ஏறக்குறைய எழுநூறு ஆண்டுகளாக ஜப்பானில் 'சாமுராய்' ஆட்சியே நிலவியது. 15 ஆம் மற்றும் 16 ஆம் நூற்றாண்டுகளில் ஜப்பானில் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும் சுதந்திர பிராந்தியங்கள் பல தோன்றின. அதன் விளைவாக சாமுராய் வீரர்களுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டது.

15 ஆம் நூற்றாண்டின் அரையிறுதியில் ஜப்பான் மீண்டும் ஒன்றிணைந் தது. 'இடோ' யுகத்தில் அவர்கள் நிலையான அதிஉயர் சமூகமாகப் பரிணமித்தனர். கோட்டைகள் நிறைந்த நகரங்களிலேயே சாமுராய் கள் வாழ்ந்தனர். 'இடோ' யுகத்தில் 250 வருடங்கள் கழிந்தபின் ஜப்பா னில் சமாதானம் உதயமாகியது. அப்பொழுது சாமுராய்களின் முக்கியத்துவம் வீழ்ச்சி அடைந்தது. பெரும்பாலான சாமுராய்கள் ஆட்சி இயந்திரத்தின் அதிகாரிகளாகவும், ஆசிரியர்களாகவும், கலைஞர்களாகவும் மாறினர். 1868 இல் ஜப்பானில் நிலவுடமைச் செல்வந்தர்களின் ஆட்சி முடிவுக்கு வந்தது. சில வருடங்களின் பின் 'சாமுராய்' என்ற பாகம் இல்லாதொழிந்தது.

## ஒழுக்கம் தவறாத சாமுராய்

'சாமுராய்' ஒருவர் 'புஷிடோ' எனும் கௌரவமானதும் உயர்ந்த பண்புகள் நிறைந்த தர்மங்களை உள்ளடக்கிய முறையிலேயே வாழவேண்டும். அவர்கள் மிகுந்த ஒழுக்கம் நிறைந்தவர்களாகவும், பண்புகள் நிறைந்தவர்களாகவும் கௌரவத்திற்குரியவர்களாகவும் திகழ்ந்தனர். அத்துடன், தனது எஜமானுக்கு சார்பாக நம்பகமான சேவைகள் புரிவதற்காக தம்மை அர்ப்பணித்தவர் களாகவும் திகழ்ந் தனர். ஏதாவது ஒரு காரணத்தால் 'புஷிடோ' உயர் தர்மங் களுக்கு அமைய வாழ முடியாவிட்டால் திகிலூட்டும் விதத்தில் தமது வாழ்க்கையை முடித்துக் கொள்ள அதாவது தற்கொலை செய்துகொள் ளும் வழக்கம் அவர்களி டையே காணப்பட்டது. அக்கால ஜப்பானியர்களின் வாழ்க்கை முறைப்படி சாமுராய் என்பவன் ஒரு போர்க்களப் புயல்! சாமுராய் எதிரிகள் கையில் சிக்க மாட்டான். மீறிச் சிக்கிக்கொண்டால் தனது வயிற்றை அறுத்துக் கொண்டு தற்கொலை செய்துகொள் வான். இதனை 'ஹரா-கிரி' என அழைப்பர்.

## சகல கலைகளிலும் தேர்ந்தவர்கள்

இராணுவத்தினராக இருந்தா லும் சாமுராய்கள் உயர் கல் வியை கற்றவர்கள். சாமுராய் சமூகத்தில் கல்வி என்பது அத்தியாவசியமா னதாக இருந் தது. அதனால் தான் சாமுராய்கள் உயர் பண்புகளைக் கொண்டவர்களாக விளங்கினர். போருக்குப் பொருத்தமற்ற வேறு பல கலைகளையும் சாமுராய் என்பவன் அறிந்திருக்க வேண்டு மென்பது புஷிடோ தர்மத்தின் கோட்பாடாகும். கவிதைகள் புனை வது, பூங்காக்களை அமைப்பது, தனி வர்ண ஓவியங்களைத் தீட்டு வது, சிற்பங்கள் வடிப்பதோடு விசேடமாக தேநீர் விருந் தோம்பலை நடத்துவது என்பன சாமுராய் கலாசா ரத்தின் பொது லட்சணங்களாகும். மலர் அலங்காரம், மரவேலைப்பாடு, இலக்கியம் போன்ற விடயங்களை யும் சாமுராய்கள் கற்றுத் தேர்ந்தனர்.



சாமுராய்கள் பகிரங்கமாக வாளை உறையில் இட்டபடி நடமாட பூரண அனுமதி பெற்றிருந்தனர்.

பல நூற்றாண்டுகளாக புகழ்பெற்று விளங்கிய சாமுராய்களின் நிர்வாக ஆட்சியானது, ஜப்பானிய கலாசா ரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி யது.1200 முதல் 1600 வரையிலான கால கட்டத்தில் தேநீர் விருந்துபசா ரம், தனிவர்ண ஓவியக்கலை, பூந்தோட்டங்களை நிர்மாணித்தல் மற்றும் காவியங்கள் என்பன சாமுராய் கலாசாரத்தின் ரசனைமிகு விளைவுகளாகும். ஜப்பானிய கலாசாரத்தில் உயர் அந்தஸ்தை வகித்த சாமுராய்களின் ஆதரவை யும் கவனத்தையும் சீன கலை ஞர்கள் பெரிதும் தம்பால் ஈர்த்துக்கொண்டனர். அதனால் சாமுராய்களின் கலை, கலாசார பண்புகள் சீனரிடையே பெரிதும் பரவின.

## சாமுராயின் உடை

சாமுராய்கள் சமுதாயத்தில் அதிஉயர் வரவேற்புடன் அதிக சக்திவாய்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களின் நடை உடை பாவனை அனைத்தும் மிக எளிமையானது. அத்துடன், அவர்களின் செயல் நடவடிக்கை களுக்கு ஏற்ற விதத்தில் உருவாக்கப்பட்டது. எப்பொழுதும் நிரந்தர மாகவே யுத்தத்திற்கு தயாராக இருக்கும் சாமுராய்களின் உடையானது, சுற்றித் திரிவதற்கும் வேகமாகச் செயல் படுவதற்கும் இலகு வாக அங்குமிங்கும் அசையும் விதத்தி லும், தாராளமாக இட மிருக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாமுராய்?

சாதாரணமானதொரு சாமுராயின் உடையானது, 'ஹக்காமா' என அழைக்கப்படும் பெரிய காற்சட்டை, கிமோனோ மற்றும் இரு கைகளைக் கொண்ட பனியன் ஆகியவற்றைக் கொண்டதாகும். சாமுராய்கள் அணியும் கிமோனோவானது, இலகுவானதும் மெல்லியதாகவும் இருப்பதோடு, நல்ல தோற்றத்தைக் கொடுப்பதற்காக பட்டு நூலில் நூர்க்கப்பட்டிருக்கும் பாதங்களைப் பாதுகாப்பதற்காக மரப்பாதணிகள் அல்லது வேறு பாதணிகளை சாமுராய்கள் அணிந்தனர்.



## ஆயுதம்

சாமுராய் என்பவன் ஒரு போர்க்களப் புயல். போர்க்களத்தில் புயலாய்ச் செயற்படுபவன். அதனால், அவனிடத்தில் பலவிதமான ஆயுதங்கள் காணப்படும்.

'சொக்குட்டோ' எனும் வாள் அவன் வசமிருக்கும் விசேட ஆயுதமாகும். 'கடானா' என அழைக்கப்படும் இந்த சுழலும் வாள் பின்னர் சாமுராய்களிடையே மிகவும் பிரபலம் அடைந்தது. அது சாமுராய்களின் குறியீட்டு ஆயுதமாகியது. 'புஷிட்டோ' தர்மத்தின் பண்பின் படி, சாமுராய்களின் ஆன்மா அவர்களின் 'கடானா' எனும் வாள் ஆகும். விசேட கவசத்துடன் எடுத்துச்செல்லப்படும் இந்த கடானா, சமூக நிலையையும் சமூக வகுப்பு வேறுபாடுகளையும் வெளிப்படுத்தும் அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டது. அவற்றை எடுத்துச் செல்லும் அனுமதி சாமுராய்களுக்கு மட்டுமே விசேட உரித்துடையதாக இருந்தது.

'யும்' எனும் பெயரில் அழைக்கப்பட்ட நீளமான வில் ஒன்றும் சாமுராயின் ஆயுதங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. 16 ஆம் நூற்றாண்டில் சீனாவில் இருந்து ஜப்பானுக்குக் கொண்டுவரப்பட்ட வெடிமருந்துகளும் துப்பாக்கிகளும் அதுவரை ஜப்பானில் வில் போன்ற ஆயுதங்களுக்கிருந்த முக்கியத்துவத்தை இல்லாதொழித்தது. பீரங்கிகளும் வெடிமருந்துகள் மூலம் இயங்கும் ஏனைய ஆயுதங்களும் பின்னர் சாமுராய்களுக்கு முக்கிய ஆயுதங்களாகின.



சாமுராய் வீரன்

## சாமுராயின் தோற்றம்

ஆயுதங்கள் மற்றும் பல்வேறு கவசங்களைக் கொண்டிருப்பதால் பெரிய உடல் போன்று தோற்றமளித்தாலும் ஜப்பானியருக்கே உரித்தான சிறிய உடல் அமைப்பே சாமுராய்களுக்கும் இருந்தது.

எனினும், ஜப்பானியர்களைவிட சாமுராய்களின் மூக்கு ஐரோப்பியர்களைப் போன்று காணப்படும். சாமுராய்கள் 'ஜனு' எனப்படும் ஒரு ஜப்பானிய கோத்திரத்தாரின் வழித்தோன்றலாக இருப்பதே அதற்குரிய காரணம் என நம்பப்படுகின்றது.

## சாமுராய் போருடை

சாமுராய்களின்மீது அதிக கவனத்தை ஈர்ப்பது அவர்களின் மர்ம மாயங்கள் நிறைந்ததும் பயங்கரத் தோற்றத்தைக் கொடுக்கக்கூடியதுமான கவச உடையாகும். அந்த உடையின் சகல பகுதிகளும் வெவ்வேறாக கழற்றிப் பொருத்தக் கூடிய விதத்தில் உள்ளமை ஒரு விசேட அம்சமாகும். சாமுராய் கவச உடையானது, சகல அசைவுகளுக்கும் இலகுவான முறையில் ஈடுகொடுக்கக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டது. சிறந்த முறையில் போர்க்கவசமாக பயன்பட்டு அணிந்துகொள்பவருக்கு உயர்ந்த பாதுகாப்பை பெற்றுக்கொடுக்க வேண்டும். அத்தோடு, போர்க்களத்தில் இலகுவில் நடமாடும் விதத்தில் சாமுராய்களின் போருடை தயாரிக்கப்பட வேண்டும் என்பது விதிமுறையாகும். சாமுராய் கவசமானது, நிறப்பூச்சு பூசப்பட்ட தோல் அல்லது உலோகங்களினால் தயாரிக்கப்பட்டிருந்தது.

சாமுராய்களின் கவசத்தில் மிகவும் அபூர்வமான பகுதி அவர்களின் தலைக்கவசமாகும். அதனை 'கபுட்டோ' என அழைப்பர். கபுட்டோவின் முக்கிய பகுதியாக கருதப்படுவது கழுத்தை மூடி கவசமாய் பாதுகாக்கும் பகுதியாகும். பாதுகாப்பை வழங்குவதற்கு மேலதிகமாக ஆயுதபாணியுடன் கூடிய முகமூடியானது எதிரிகளைப் பயமுறுத்தவும் பயன்படுகின்றது.

## சாமுராய் வீராங்கனைகள்

சாமுராய் போராளிகளைத் தவிர, சாமுராய் பெண் போராளிகள் குறித்து சாமுராய் வரலாற்றில் மிகச் சிறிய அளவிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. சாமுராய் பெண் போராளிகளை, ஒனா புகீஷா, என்றழைப்பர்.

இரஞ்சித் ஜெயகர்




19 ஆம் நூற்றாண்டில் சாமுராய் ஒருவரின் போருடை ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - II

பெயர்: ..................................................

★ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01) கவிதையை வாசித்து, கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

*செக்கச் சிவந்த செங்கதிரோனும்*
*கிழக்கினில் வந்துவிட்டான்- புவி*
*மக்கள் கண்விழித்துக் கிளம்பிட*
*வானில் உதித்து விட்டான்*

*கொக்கரக்கோவென கோழியும் கூவுது*
*கொக்கோடு பற்பல புட்களும் மேவுது*
*சக்கரம் போலவே ஜகம் சுழன்றாடுது*
*தொங்கி நின்ற இருள் சொல்லாமல் ஓடுது*

1) இக்கவிதையில் வர்ணிக்கப்படும் காட்சி எது?
..................................................

2) பின்வரும் சொற்களின் கருத்தை விளக்குக.
i. கண்விழித்து - ..................................
ii. செங்கதிரோன் - ..................................

3) கவிதையில் உள்ள உவமை ஒன்று தருக.
..................................................

4) கவிதையில் குறிப்பிடப்பட்டுள்ள இரு பறவைகள் எவை?
..................................................

5) 'நின்ற இருள் சொல்லாமல் ஓடுது' என்பதன்மூலம் கவிஞர் எதை விளக்குகின்றார்?
..................................................

6) இறந்தகால வினைமுற்று ஒன்று தருக.
..................................................

7) இக்கவிதையில் உள்ள புவிக்கு ஒத்தகருத்துச் சொல் ஒன்று தருக.
..................................................

02) பின்வரும் உவமைத் தொடர்களை விளக்குக.
i. சிறகிழந்த பறவை போல ..................................
ii. பூவும் மணமும் போல ..................................

03) பின்வரும் இணைமொழிகளின் பொருளைத் தருக.
i. அடிமுடி ..................................
ii. ஆற அமர ..................................
iii. அல்லும் பகலும் ..................................

04) இடைவெளிகளை நிரப்புக.
i. பாம்பு சீறும் என்பது போல தேனீ ..................................
ii. பனைக்கு வடலி போல நெல் ..................................
iii. தவளை பேத்தை போல குரங்கு ..................................

05) ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களை தமிழில் எழுதுக.
i. I am very happy - ..................................
ii. Please come out - ..................................

06) தரப்பட்டுள்ள தமிழ் வாக்கியங்களை ஆங்கிலத்தில் எழுதுக.
i. தயவுசெய்து அமருங்கள் ..................................
ii. நான் உள்ளே வரலாமா? ..................................




07) பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தை தமிழில் தருக.
i. அம்மே பத் தென்ன - ..................................
ii. ஸ்தூதி குருதுமா- ..................................

08) பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின்கீழ் கீறிடுக.

01. பயிர்ச்செய்கையின்போது பயிர்களுக்கு தீங்கு விளைவிப்பது;
1. நத்தை 2. செண்பகம்
3. மழைக்குருவி 4. தேனீ

02. நுளம்பு கடிப்பதைத் தடுக்க உடம்பில் பூசுவது;
1. தேங்காய் எண்ணெய் 2. நல்லெண்ணெய்
3. சிற்றினெல்லா எண்ணெய் 4. பேபி எண்ணெய்

03. இங்கு காட்டப்பட்டுள்ள நட்சத்திரக் கூட்டத்தைக் குறிக்கும் பெயர்;

1. துலா 2. ரிஷபம்
3. கலப்பை 4. சிறுகரடி

04. இந்த இலட்சினை மூலம் உமக்கு விளங்குவது யாது?

1. நீரைப் பயன்படுத்தாதீர்
2. கழுவாமல் பயன்படுத்துக
3. நீரை வீணாக்காதீர்
4. நீரைக் குடிக்காதீர்

05. மீனவர் சிறு மீன்களைப் பிடிக்கப் பயன்படுத்தும் கூடை வடிவில் அமைந்த உபகரணம் யாது?
1. நாம்புவ 2. கரைவலை
3. அத்தாங்கு 4. தோணி

06. பித்தளைப் பாத்திரத்தை துப்புரவாக்கி மினுக்குவதற்கு உகந்த பொருள்;
1. உப்பு 2. பழப்புளி
3. தேயிலை 4. தேங்காய்ப்பூ

07. மழையுடன் மின்னல் ஏற்படின் பாதுகாப்புக்காக நாம் பின்பற்ற வேண்டிய சரியான நடவடிக்கை;
1. வீட்டினுள்ளே இருத்தல்
2. வீட்டினுள்ளே பாதணிகளை அணிந்திருத்தல்
3. நிலத்துடனான தொடர்பைத் தவிர்த்தல்
4. உலோக பொருட்களைத் தொடாதிருத்தல்


08. உலர் கலம் பயன்படும் ஓர் உபகரணம்;
1. தையல் இயந்திரம் 2. மின்சூள்
3. அரைக்கும் பொறி 4. தையல் இயந்திரம்

09. 'சூடடித்தல்' எத்தொழிலுக்குரிய செய்கையாகும்?
1. விவசாயம் 2. மீன்பிடித்தல்
3. இரத்தினக்கல் அகழ்தல் 4. தச்சுவேலை

10. சமாதானத்தைக் குறிக்கும் நிறம் யாது?
1. சிவப்பு 2. நீலம் 3. வெள்ளை 4. கறுப்பு

பகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நற்பண்புகளை கற்பித்தலும் ஆசிரியர்களின் கடமையாகும்

மாணவப் பருவத்தில் கல்வி நடவடிக்கைகளிலும் சரி, ஒழுக்கப் பண்புகளைக் கற்பதிலும் சரி மாணவ சமூகமானது, ஆசிரியர்களிலேயே தங்கியுள்ளது. இத்தகைய ஆசிரிய சமூகத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி இக்கட்டுரை அலசுகின்றது.

இன்று நாடு முழுவதும் திறமையான ஆசிரியர்கள் இருக்கும் அதேவேளை, சில சந்தர்ப்பங்களில் தமது பொறுப்பிலிருந்து தவறுபவர்களையும் காணமுடிகின்றது. அதாவது, மாணவர்களுக்கு முன்மாதிரியாக நடக்கவேண்டிய ஆசிரியர்கள் தமது முன்மாதிரிகளை இழந்துவிடுவதும் சில ஆசிரியர்கள் பாடங்களில் மட்டுமே அக்கறை காட்டி மாணவர்களுக்கு வழங்க வேண்டிய வாழ்க்கை ஒழுக்கநெறிகளை வழங்கத் தவறிவிடுவதும் இயல்பாகவே காணப்படுகின்றது. அத்தகைய ஆசிரியர்கள்



மாணவர்களுக்கு பாட விடயங்களுடன் வாழ்க்கை நெறிகளை கற்பிக்கக் கடமைப் பட்டவர்களாகவும் உள்ளனர். இத்தகையோர் தமது கற்பித்தல் முறையை மாற்றிக்கொள்வதன் மூலம் வளரும் தலைமுறையை சீரிய பாதைக்கு கொண்டு செல்ல முடியும். மறுபுறம் மாணவர்கள் ஆசிரியர்களை மதித்து நடத்தல் மற்றும் ஒழுக்கம் என்பனவற்றில் பின்தங்கிய நிலையில்தான் காணப்படுகின்றனர். இதில் சினிமாவின் தாக்கம் முக்கிய பங்குவகிப்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான பல முரண்பாடுகளும் பல பாடசாலைகளில் காணப்படுகின்றன. மாணவர்கள் ஆசிரியர்களை புரிந்துகொள்ளாத் தன்மை, ஆசிரியர்கள் மாணவர்களைப் புரிந்துகொள்ளாத் தன்மை, ஒழுக்க சீர்குலைவு இதுபோன்ற காரணங்களே இந் நிலைக்குக் காரணமாகும். மாணவர்களும் ஆசிரியர்களும் அதிகளவான காலங்களை பாடசாலையில் கழிப்பதால், ஆசிரியர்களே இங்கு பெற்றோரின் பங்கை வகிக்கின்றனர். ஆகவே, மாணவர்கள் பெற்றோருக்குக் கட்டுப்படுவது போன்று ஆசிரியர்களுக்கும் கட்டுப்பட்டு அவர்களின் நன்மதிப்பைப் பெறுதல் வேண்டும்.



ஆசிரியர்களிடத்தில் மாணவர்கள் நன்மதிப்பைப் பெற மாணவர்களிடத்தில் காணப்பட வேண்டிய முக்கிய பண்புகள் எவை?

1. பாடசாலை விதிமுறைகளை மதித்தல்.
2. ஆசிரியர் தன்னிடம் என்ன சொல்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளும் பக்குவம்.
3. எதற்காகச் சொல்கிறார் என்பதை உணர்தல்.
4. ஆசிரியர்களிடத்தில் தொடர்பாடல்களை வைத்துக்கொள்ளல்.
5. ஆசிரியர் தரும் வீட்டுவேலைகளை செய்தல்.
6. பாடசாலை புறச்செயற்பாடுகளில் ஈடுபடுதல்.
7. ஆசிரியர் தண்டித்தாலும் கண்டித்தாலும் அவர் தன்மீது கொண்ட அக்கறையினால்தான் அவ்வாறு செய்கின்றார் என்பதை உணர்தல்.
8. பெரியோரை மரியாதை செய்தல், ஒழுக்கம் போன்ற விடயங்களைக் கடைப்பிடித்தல் போன்ற பண்புகளை மாணவர்கள் பெறுவதன் மூலம் ஆசிரியர்களிடத்தில் நன்மதிப்பைப் பெறலாம்.



பாடசாலை வாழ்க்கையைப் பொறுத்தவரை அது மட்டுப்படுத்தப்பட்டதொன்றாகவே உள்ளது. இவ்வாழ்க்கையை மாணவர்கள் பிரயோசனமுள்ள வாழ்க்கையாக அமைத்துக்கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களின் நல்லெண்ணத்தைப் பெற வேண்டும். ஒரு மாணவனை அல்லது மாணவியை நல்லதொரு நிலைக்கு கொண்டுவரும் சக்தி படைத்தவர்களாகவும் நாட்டின் முன்னேற்றத்திற்கு காரணமானவர்களாகவும் திகழ்ந்துகொண்டிருக்கும் ஆசிரியர்கள் நிச்சயம் பாராட்டுக்குரியவர்களே. மாணவர்களுடைய எதிர்காலம் சிறப்பாக இருந்தால்தான் நாட்டினுடைய எதிர்காலம் வளம் பெறும். ஆகவே, நாட்டினுடைய எதிர்காலத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் ஆசிரியர்களும் முக்கிய இடம் வகிக்கின்றனர்.

இன்றைய எமது சமூகத்தில் உயர்ந்த தரத்தில் காணப்படும் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள் இவ்வாறான ஏராளமானவர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்களும் ஆசிரியர்களேயாவர்.

**அஹமத் அஸ்ஸியாம்**


## வெல்லுங்கள்!

## விஜய் – TOP NEWS இணைந்து வழங்கும் வாரம் ஒரு 8GB Pen Drive பரிசு!!



பிரதி புதன்கிழமைகளில் 'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை இவ்வார 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும். சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு 8GB Pen Drive பரிசாக வழங்கப்படும்.

*30.04.2014* TOP News கேள்விக்கான விடை:
மல்லிகை

Pen Drive வெற்றியாளர்:
ஏ.பிரியதர்ஷன்,
90/47, சுவர்ணா வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06.

அனுப்பவேண்டிய முகவரி:

Pen Drive
(14.05.2014)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

'TOP News' SMS செயற்படுத்தும் முறை:




இச்சேவையின் ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்பதோடு வேலைவாய்ப்பு ALERT களையும் பெறமுடியும்.

இவ்வார கூப்பன்:
14.05.2014

விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................
..............................
கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சிறைக்கைதியாகிய எஹலப்பொல

கிளர்ச்சி ஏற்பட்ட பதின்மூன்று பிரதேசங்களிலும் ஆங்கிலேயர் தமது படை அணிகளை நிலை நிறுத்தினர். இதற்கிடையில், கண்டி சிம்மாசனத்திற்கு போலியாக உரிமை கோரியவர்களையும் கெப்பட்டிபொலவையும் கைது செய்ய ஆங்கிலேயர்களால் முடியாமல் போனது. சில தினங்கள் கழிந்தபோது கிளர்ச்சி மலையகம் எங்கும் தீவிரமாகப் பரவியது. இதனால், ஆங்கிலேயர் எஹலப்பொலயை கைது செய்தனர். அவரை பாதுகாப்புடன் கொழும்பிற்கு அனுப்பினர். எனினும், பிரதானிகள் உள்ளிட்ட உயர் வர்க்கத்தினர் அனைவரும் கிளர்ச்சிக்காரர்களுக்குப் பகிரங்கமாகவும், மறைமுகமாகவும் உதவினர். இதில் மலையகத்தின் முக்கிய பிரதானிகளில் ஒருவராகிய மொல்லிகொட மாத்திரமே ஆங்கிலேயருடன் சிறந்த நட்புறவைப் பேணினார். அவர் எஹலப்பொலயின் பரம எதிரியாக இருந்தமையே அதற்குரிய காரணமாகும்.

இதேவேளை, ஆங்கில ஆள்பதி முழு நாட்டிற்கும் யுத்தச் சட்டத்தை அமுல்படுத்தினார். இதற்காக மலையகப் பிரதானிகளை அழைத்தார். நாட்டில் ஏற்பட்டுள்ள இரத்தம் சிந்தும் நிலையை தடுத்து நிறுத்துவதற்கு அவர்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தும்படி கேட்டுக்கொண்டார். இந்த கிளர்ச்சியை நிறுத்துவதற்குத் தேவையான படை அணிகள் ஆள்பதி வசம் இருந்தது. இதனால், அவர் கடுமையான அடக்குமுறை மூலம் கிளர்ச்சியை அடக்க முனைந்தார். எது எவ்வாறெனினும், பிரதானிகளிடம் ஆள்பதி விடுத்த கோரிக்கைகள் நிறைவேறவில்லை. இச்சந்தர்ப்பத்தில் கண்டியில் இருந்த ஆள்பதி அங்குள்ள வைத்தியசாலையில் இருந்த நோயாளிகளுக்கு அவர்களின் பாதுகாப்புக் கருதி கைத்துப்பாக்கிகளை வழங்கப்பணித்தார். நிலைமைகள் மோசமடைந்ததால், பிரவுன்ரிக் அவர்களின் துணைவியாரை கோட்டையில் இருந்த படையினரில் பெரும்பாலானோரின் பாதுகாப்புடன் கொழும்பிற்கு அனுப்பினார். எனினும், நிலைமை மென்மேலும் மோசமடையவே கண்டியை கைவிட்டுச் செல்வதற்கான ஆரம்ப ஏற்பாடுகளை ஆள்பதி மேற்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் மெஜிக் செய்யலாம்

இன்று நாம் நாணயக்குற்றிகளைப் பயன்படுத்தி மெஜிக் ஒன்றை செய்யப் போகின்றோம்.

**தேவையான பொருட்கள்:**

- சாதாரண அளவுடைய நாணயங்கள்-10
- பை அல்லது கை நுழையக்கூடியவாறான பாத்திரம் ஒன்று
- மாக்கர் பேனா ஒன்று



**செய்முறை:**

தெரிவுசெய்யப்பட்ட நாணயம் ஒன்றில் பார்வையாளர் ஒருவரது பெயரின் முதல் எழுத்தினை எழுதுமாறு கூறி, அந்த நாணயத்தை மீண்டும் பாத்திரத்தினுள் அல்லது பையில் இடுமாறு கூறுங்கள். நீங்கள் நாணயத்தை பார்க்காமல் சரியாக அந்த நாணயத்தை எடுத்துக் காட்டுவதே இங்கு நடைபெறும் மாயாஜால வித்தையாகும். இந்த மாயாஜாலத்தை நீங்கள் முன்பு அறிந்திராவிட்டால், உண்மையில் இதன் ரகசியத்தை உங்களால் அனுமானிக்க முடியாது.

**1 ஆவது படிமுறை:**



நாணயப் பாத்திரத்தில் இருந்து ஒரு நாணயத்தை தெரிவுசெய்யுங்கள். நாணயத்தை உள்ளங்கையில் வைத்து வலது கையில் பெருவிரலையும் நடுவிரலையும் நாணயத்தில் வைத்து அழுத்தி 10 முறை சுழற்றி, மாக்கர் பேனாவினால் அதில் அவரது பெயரின் முதல் எழுத்தை எழுதுமாறு பார்வையாளர் ஒருவரிடம் கூறுங்கள்.



**2 ஆவது படிமுறை:**

நாணயத்தில் மை உலரும் வரையில் உள்ளங்கையில் வைத்துக் கொண்டு நாணயத்தின்மீது மனதின் கவனத்தை செலுத்துமாறு பார்வையாளருக்கு கூறுங்கள். (அவர் நாணயம் மீது அவதானம் செலுத்தினால் மட்டுமே அந்த அவதானத்துடன் நாணயத்தைத் தன்னால் கண்டுபிடிக்க முடியும் என்று அவரிடம் கூறுங்கள்)



**3 ஆவது படிமுறை:**

பின்னர் நாணயத்தை பாத்திரத்தினுள் அல்லது பையினுள் இட்டு அதனை நன்கு ஏனைய நாணயங்களுடன் கலக்குமாறு பார்வையாளரிடம் கூறுங்கள். (நீங்கள் இதன்போது பார்வையாளருக்கு எதிரிலேயே நிற்க வேண்டும்)



**4 ஆவது படிமுறை:**



இப்பொழுது மாயாஜால வித்தையின் சக்தியைப் பயன்படுத்தும் நேரம் வந்துவிட்டது. நீங்கள் நின்ற இடத்தில் இருந்தவாறு நாணயங்கள் உள்ள பாத்திரத்தில் கையை விட்டு பெயரின் முதலெழுத்து எழுதி உள்ள நாணயத்தை மட்டும் எடுக்க வேண்டும்.



**ஆலோசனை:**

சிலரின் கைகள் இயற்கையாகவே குளிராக இருக்கும். ஐந்து நிமிடமாவது நாணயத்தை கையில் வைத்திருக்க வேண்டும். இல்லாவிடின், மாயாஜாலம் தோல்வியுறும். மாயாஜால வித்தையின் ஆரம்பத்தில் நாணயங்களை குளிர் நீரில் கழுவிக்கொள்ளுங்கள். இதன்போது சற்று சூடான நாணயத்தை தேடிக்கொள்வது இலகுவாக இருக்கும்.

பார்வையாளர்கள் கோரிக்கைக்காக இரண்டாவது முறையும் இந்த மாயாஜால வித்தையை செய்து காட்ட முயற்சிக்காதீர்கள். அவ்வாறு செய்வதாயின், பயன்படுத்தப்பட்ட நாணயங்களை அவர்களுக்குத் தெரியாமல் அப்புறப்படுத்திக் கொள்ளுங்கள்.

**ரகசியம்:**

நாணயத்தைக் கண்டுபிடித்த மாயாஜால ரகசியம் என்ன என்பது பற்றி உங்களுக்குத் தெரியாதல்லவா? அதுதான் பார்வையாளர்களின் கவனயீர்ப்பு. நாணயத்தை உள்ளங்கையில் வைத்திருக்கும்போது உடல் வெப்பத்திற்கு ஏற்ப நாணயமும் சூடாகின்றது. இதுதான் இந்த மாயாஜாலத்தின் ரகசியம். மற்ற நாணயங்களை விட இந்த நாணயம் சற்று சூடாக இருக்கும் பட்சத்தில் இலகுவில் நாணயத்தை அடையாளம் கண்டுகொள்ளலாம்.

மெஜிக் மாமா

# விஜய் மாணவர் கழகம்



அங். இல: 5656

ஸஹத் சாலிஹ், பள்ளியாவத்தை வீதி, மருதானை.



அங். இல: 5657

ச.சதுர்ஷனா, 6 ஆம் வட்டாரம், நயினாதீவு.



அங். இல: 5658

பாத்திமா முஸம்மில், பலகொல்ல, கெங்கல்ல.



அங். இல: 5659

ஐ.எம்.பஹாட், தோல வீதி, மாத்தளை.



அங். இல: 5660

நுஸ்கி அஹ்மத், காதர் வீதி, அக்கரைப்பற்று-06.



அங். இல: 5661

முஸக்கிர் அஹமட், S.S.O வீதி, ஓட்டமாவடி-03.



அங். இல:5662

எச்.எம்.இல்ஹாம், அனுராத வீதி, ஹொரவப்பொத்தானை.



அங். இல: 5663

ம.திவாகரன், சங்கமித்தா மாவத்தை, கொழும்பு-13.

# தெரிந்து கொள்வோம்

- **ஓசோன் படையில் ஓட்டை விழுவதைக் கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?**
  2012 இல் காலமான சேர் ப்ரேங் ஷேர்வூட் ரோலண்ட் எனும் ஐ.அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானி.



- **இலங்கையில் தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் காணப்படும் இடங்கள் எவை?**
  i. அனுராதபுரம் - 9 ஆம் நூற்றாண்டு
  ii. வவுனியா - கி.பி 12 ஆம் நூற்றாண்டு



- **புவியில் அதிகமாகக் காணப்படும் வாயு எது?**
  ஐதரசன்
- **சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐ.நா வின் செயற்குழுவில் அங்கம் வகிக்கும் இலங்கையர் யார்?**
  டொக்டர் சிரந்தி விஜயமான்ன. 2010 இல் இவர் தெரிவு செய்யப்பட்டார்
- **கீகிரிய குகை ஓவியங்கள் உலகியல் சம்பந்தமானது. இலங்கையில் சமய சம்பந்தமான குகை ஓவியங்களுக்கு புகழ்பெற்ற இடம் எது?**
  ரங்கிரி தம்புள்ள விகாரை



தொகுப்பு: உடுவை பரந்தாமன்


படத்தை இங்கே ஒட்டவும்



விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..........

முகவரி: ..........

..........

பாடசாலை: ..........

வகுப்பு: ..........

திகதி: ..........

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்கு நாடு இலகுவாகவும் பாதுகாப்பாகவும் பயணம் செய்ய தற்காலத்தில் விமானங்கள் பயன்படுகின்றன. விமானங்களின் வருகைக்கு முன்னர், மனிதனின் பறக்கும் கனவை நிறைவேற்றிய ஒரு சாதனமாக 'வாயு பலூன்' திகழ்ந்தது. அந்தவகையில் வாயு பலூனின் ஆரம்பமானது சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்துள்ளது. எனினும், இன்றைய காலத்தில் பெரும்பாலும் வீர சாகசச் செயல்களுக்காகவும் கேளிக்கைகளுக்காகவுமே வாயு பலூன்கள் பயன்படுத்தப்படுகின்றன. வாயு பலூன் வரலாற்றுக் கதையின் முக்கிய அம்சங்களை இங்கு நோக்குவோம்.



### 1783 இல்...


யான் ஃப்ரென்ஷுவா பிலாத்ரிடீ ரோசியர் மற்றும் ஃப்ரென்ஷுவா பொரேன் ஆகிய இருவருமே முதன் முதலாக வாயு பலூனைப் பயன்படுத்தி பிரான்ஸின் பெரிஸ் நகருக்கு மேலாகப் பறந்தனர். அன்று பெரிஸ் நகரின் மாக்கிஸ் டீ அலன்டே பூங்காவில் அணிதிரண்ட மக்கள், இந்த அபூர்வ பலூனைப் பார்த்து ஆச்சரியத்தில் வாய் பிளந்து நின்றனர். ரோசியர் மற்றும் பொரேனின் இந்த முதலாவது பலூன் பறப்பு 25 நிமிடங்கள் வரை நிகழ்ந்தது.


### 1784 இல்...

வானில் பறந்த முதலாவது பெண் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? அவர் ஒரு பாடகி ஆவார். மாரி எலிசபெத் திப்ல் என்பது அவரது பெயராகும். மொன்ட்கொல்ஃபியர் ரக பலூனில், பிரான்ஸின் லியோன் நகருக்கு மேலாக இவர் பறந்தார். பறக்கும் போது, கல்விக்கு அதிபதியான மினர்வா தேவதையை நினைவூட்டும் வகையிலான ஆடையையே அவர் அணிந்திருந்தார். அவரது ஒரு கையில் சுவீடனின் நான்காவது குஸ்டாஃப் மன்னரின் உருவப்படம் இருந்தது. நான்காவது குஸ்டாஃப் மன்னரும் மாரி எலிசபெத்தின் பலூன் பயணத்தினை தரையில் இருந்து கண்டுகளித்தார் என்று வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 1793 இல்...

வட அமெரிக்காவின் முதலாவது வாயு பலூன் பறப்பினைக் கண்டுகளிப்பதற்கான அனுமதிப் பத்திரத்தினைக் கொள்வனவு செய்வதற்காக, பிலடெல்பியாவின் பூங்காவில் அணி திரண்டிருந்த மக்களில் ஒருவராக அந்நாள் அமெரிக்க ஜனாதிபதியான ஜோர்ஜ் வொஷிங்டனும் இருந்தமை சிறப்பம்சமாகும். பிரான்ஸ் நாட்டு வாயு பலூன் பறப்பாளரான யான் ஃப்ரென்ஷுவாவும் இந்த பலூன் பறப்பு நிகழ்வில் பங்குபற்றினார்.





### 1861 இல்...

1861 ஆம்ஆண்டில்தான் யுத்த நடவடிக்கைக்காக வாயு பலூன் முதன் முதலில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேடியஸ் லோ என்பவர்தான் அப்பொழுது பலூனில் இருந்துள்ளார். அவர் வேர்ஜினியாவின் ஆலின்டன் பகுதிக்கு மேல் வான் பரப்பில் இருந்தவாறு, மூன்று மைல் தொலைவில் இருந்த எதிரிகளின் படை முகாமை அவதானித்து, அது பற்றி அறிவித்துக்கொண்டிருந்துள்ளார். இதன் காரணமாக எதிரிப்படையினரை இலகுவில் தோற்கடிக்க முடிந்தது.

### 1897 இல்...

சுவீடன் விஞ்ஞானியான சாலமன் ஒகஸ்ட் அன்ட்றூ, மேலும் இரண்டு உதவியாளர்களுடன் ஸ்பிட்ஸ்பேர்க் நகரில் இருந்து ஆய்வுக்கென வட துருவத்தினை நோக்கி வாயு பலூனில் பறந்தார். ஆனால், அவர்கள் புறப்பட்டுச் சென்ற பின்பு எந்தவிதமான தகவலும் கிடைக்கவில்லை. இச்சம்பவம் நிகழ்ந்து சுமார் 33 ஆண்டுகளுக்குப் பின்னர், அதாவது 1930 இல் சீல் வேட்டைக்குச் சென்ற குழுவினருக்கு ஒகஸ்ட் அன்ட்றூவின் நாட்குறிப்பு, லொக் குறிப்பு மற்றும் படச் சுருள் என்பன கிடைத்தன. அவருக்கு என்ன நடந்தது என்பது அதுவரை மர்மமாகவே இருந்தது.

### 1931 இல்...

வளிமண்டலத்தின் அடுக்கு மண்டலத்திற்கு வாயு பலூனில் முதன்முதலாக சென்றவர்களாக போல் கீபர் மற்றும் ஒகஸ்ட் பிகாட் ஆகிய இருவரும் இனங்காணப்படுகின்றனர். அவர்கள் தமது பயணத்தின்போது, தலைக்கவசத்தினை அணிந்திருந்ததுடன், அவர்களின் பாதுகாப்புக்கு என்று வான் பரப்பில் விசேட கண்காணிப்பு கூடமொன்றும் பொருத்தப்பட்டிருந்தது. ஜேர்மனியின் ஒக்ஸ்பேர்க்கிலிருந்து மேல் எழுந்த இந்த வாயு பலூன், அதன் கம்பிகள் அப்புறப்படுத்தப்பட்ட பின்னர் சுமார் பத்து மைல் தொலைவுக்கு வான் பரப்பில் பறந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது.

### 1934 இல்...

'எக்ஸ்ப்ளோரர்-1' என்ற வாயு பலூனில் பயணித்தவர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாயு பலூனில் மனிதன் பறந்த வரலாறு




மேஜர் வில்லியம் ஈ. கேப்னர், கெப்டன் அல்பட் டபிள்யூ. ஸ்டீவன்ஸ் மற்றும் கெப்டன் ஒவில் ஏ. அன்டர்சன் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர். இவர்களின் பலூன் தரையிலிருந்து சுமார் 60,613 அடி மேல் வானில் பறந்து கொண்டிருக்கும்போது பாதிப்புக்குள்ளானதால், அதில் பயணித்தவர்கள் பெரசூட்டின் உதவியுடன் கீழே இறங்கி வர நேர்ந்தது.


## 1935 இல்...

ஸ்டீவன்ஸும் அன்டர்சனும் தமது வீர சாகசத்தினை வெளிப்படுத்தும் முகமாக, 'எக்ஸ்ப்ளோரர்-2' எனும் வாயு பலூனில் மீண்டும் வான் பரப்புக்குச் சென்றனர். இ[illegible]போது, ஒரு தொன் நிறை கொண்ட விஞ்ஞான உபகரணங்களையும் அவர்கள் எடுத்துச் சென்றதுடன், தரையிலிருந்து 72,395 அடி உயரம் வரை அவர்கள் சென்றனர். அதிக உயரத்தில் பறந்த இவர்களின் இந்த சாதனை 21 ஆண்டுகள் வரை முறியடிக்கப்படவில்லை.

## 1960 இல்...

கெப்டன் ஜோ டபிள்யூ. கிடின்கர் வாயு பலூனொன்றில் பறந்தார். புதிய ரக பெரசூட் ஒன்றினைப் பரீட்சித்துப் பார்க்கவே அவர் இந்தப் பயணத்தினை மேற்கொண்டார். பலூனில் இருந்து வெளியில் குதித்த அவர், 13 நிமிடங்கள் வரை மேல் வானிலிருந்து 600 மைல் வேகத்தில் கீழ் நோக்கி மிதந்து வந்து, இறுதியில் பெரசூட்டின் உதவியுடன் தரையிறங்கினார்.



## 1978 இல்...

மெக்சி அன்டர்சன், பென் அப்ருசோ மற்றும் லெரி நியூமன் ஆகியோர் 'டபள் ஈகள்-2' என்ற வாயு பலூன் மூலம் அட்லாண்டிக் சமுத்திரத்தினைக் கடந்தனர். மேன் தீவிலிருந்து பிரான்ஸின் மிசரி நகரம் வரை இவர்கள் அதில் சிறப்பாகப் பயணித்தனர். இந்தப் பயணத்தின் இறுதித் தினத்தில், தாம் பறந்து கொண்டிருந்த உயரத்திலிருந்து குறித்த வாயு பலூன் திடீரென 19,500 அடி கீழ்நோக்கி வந்தது. இந்த சம்பவத்தைத் தவிர வேறு எந்தவோர் அனர்த்தமும் நிகழவில்லை.

## 1984 இல்...

அட்லாண்டிக் ஊடாகச் சென்ற நீண்ட வாயு பலூனில் பயணித்த பெருமையும் ஜோ டபிள்யூ. கிடின்கரையே சாரும். மேன்ஹி கரிபூவல் என்ற பகுதியில் இருந்து இத்தாலியின் செவோனா வரை அவர் வானில் பயணித்தார். தரையிறங்குகையில் அவரின் காலில் முறிவு ஏற்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது.

## 1998 இல்...

ஸ்டீவ் ஃபொசெட் என்பவர், ஆர்ஜன்டீனாவின் மென்டோசா நகரில் இருந்து 'ஸ்பிரிட் 3' என்ற வாயு பலூன் மூலம் 10 நாட்களாக எந்தவோர் ஆபத்தினையும் சந்திக்காமல் பயணித்தார். அந்த பலூன் 14,236 மைல்கள் பயணித்த பின்பு கிழக்கு அவுஸ்திரேலியாவுக்கு 500 மைல் தொலைவில் புயல் பாதிப்பினை எதிர்கொண்டு சேதம் அடைந்தது. எனினும், ஃபொசெட் பாதுகாப்பாக தரை இறங்கினார்.

## 1999 இல்...

எந்தவோர் இடத்திலும் நிறுத்தாமல், உலகைச் சுற்றி வந்து சாதனை செய்யும் நோக்கத்துடன், பேர்ட்ரன்ட் பிகாட் மற்றும் பிரயன் ஜோன்ஸ் ஆகிய இருவரும் சுவிற்சர்லாந்தின் அல்ப்ஸ் மலைப்பகுதியின் ஒரு கிராமத்தில் இருந்து புறப்பட்டனர். தமது நோக்கத்திற்கமைய, வாயு பலூன் பறப்பு தொடர்பான அனைத்துவிதமான சாதனைகளையும் முறியடித்த அவர்கள், தமது பயணத்தை நிறைவுசெய்த பின்னர், 'பூச்வீசர்' என்ற விருதினால் கௌரவிக்கப்பட்டனர். ஒரு மில்லியன் டொலர் பணப்பரிசும் அவர்களுக்கு கிடைத்தது.

-(இ)


### வெப்பவாயு பலூனை முதன்முதலில் வானுக்கு அனுப்பியது நாமே...

ஜோசப் மைக்கல் மொன்ட்டிகொல்ஃபியர் மற்றும் ஜெக்கஸ் எட்டியென் மொன்ட்டிகொல்ஃபியர் எனும் இரண்டு சகோதரர்களே வெப்பவாயு பலூனை முதன்முதலில் வானில் செலுத்தினர். இலகுவான பையொன்றில் நிரப்பப்பட்ட வெப்பமான வாயுவே, குறித்த பலூன் மேல் நோக்கி எழுவதற்குக் காரணமாக அமைந்ததாக அவர்கள் தெரிவித்திருந்தனர். 1783 இல் அவர்கள் முதன்முதலில் வெப்பவாயு பலூனை வானில் செலுத்தினர். அந்த பலூன் 3,000 அடி மேல்நோக்கி எழுந்ததுடன், 10 நிமிடங்கள் வரை வானில் மிதந்து சென்றது. அதன்பின் ஆடு, வாத்து, சேவல் ஆகிய உயிரினங்களை பலூனில் வைத்து அனுப்பி பரீட்சார்த்த நடவடிக்கைகளைச் செய்து பார்த்தனர். வெப்பவாயு பலூனில் முதன்முதலில் ஒரு பயணியை அனுப்பிய பெருமையும் மொன்ட்டிகொல்ஃபியர் சகோதரர்களையே சாரும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காற்றில் இயங்கும் வாகனம்

**பிரான்ஸின் பியுஜியோ (Peugeot) நிறுவனம் எதிர்வரும் ஆண்டில் காற்றினால் இயங்கக்கூடிய 'பியுஜியோ 208' ரக கார்களை சந்தைப்படுத்தத் தயாராகி வருகின்றது.**

### கலப்பின வாகனம்

'போஜோ' என்று இலங்கையர்களால் அழைக்கப்படும்

## சூழல் மாசடைவுக்கு ஒரு தீர்வு

'பியுஜியோ 208' ரக காரில் அழுத்தக் காற்றினால் இயங்கக் கூடிய சாதாரண என்ஜினே பொருத்தப்பட்டுள்ளது. காற்று மற்றும் பெற்றோலில் இயங்கக் கூடிய கலப்பின ரக (Hybrid ரக) காராகவே அவர்கள் இதனை அறிமுகப்படுத்துகின்றனர்.

நகரங்களில் இந்த வாகனத்தைச் செலுத்தும்போது பெற்றோலுக்கென செலவாகும் கட்டணத்தை 80 சதவீதமாகக் குறைக்க முடியும் என பியுஜியோ நிறுவனம் தெரிவிக்கின்றது.



இதற்கென சாதாரண உள்ளக எரிசக்தி வலுஎன்ஜின் பொருத்தப்பட்டுள்ளதோடு, விசேட ஹைட்ரோலிக்ஸ் முறையும் விசேட வடிவமைப்புடனான கியர் பெட்டியும் இதில் உள்ளது. அத்துடன், காற்றை சேமிக்கக்கூடியவாறும் தேவையான போது சக்தியை வெளியேற்றக் கூடியவாறும் அழுத்தக் காற்று நிரப்பப்பட்ட இரண்டு சிலிண்டர்களும் இதில் பொருத்தப்பட்டுள்ளன. இதனால்தான் இந்த வாகனத்தை பெற்றோலினாலும் காற்றினாலும் இயக்க முடிகின்றது. நகரத்திற்குள் பயணம் செய்வதாயின், அதற்காக காற்று சக்தியைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். இதன்போது, மணித்தியாலத்திற்கு 43 மைல் என்ற ரீதியில் அதன் வேக மட்டம் சுயமாகவே கட்டுப்படுத்தப்படுகின்றது.

### அதிகபட்ச வேகம்



2020 ஆம் ஆண்டளவில் மணித்தியாலத்திற்கு 117 மைல் என்ற வேகத்தில் செலுத்தக் கூடிய வகையில் இந்த வாகனத்தை நவீனமயப்படுத்த பியுஜியோ நிறுவனம் நடவடிக்கை எடுக்கவுள்ளது. வேகத்தினைக் குறைக்கும்போதும் சுக்கானை இறுக்கும்போதும் இழக்கப்படும் சக்தியை காற்று அழுத்தத் தொகுதியினூடாக மீண்டும் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

### புரட்சிகர என்ஜின் தொகுதி

இந்த ஹைப்ரிட் /அழுத்தக் காற்று என்ஜின் தொகுதியானது, முதலில் பெற்றோல் மற்றும் அழுத்தக் காற்று கலப்பிலேயே இயங்குகின்றது. இதனால், தற்போது பாவனையில் உள்ள ஹைப்ரிட் கார்களைப் போன்று இந்த புதிய கார்களுக்கு அதிக விலை கொண்ட பற்றரி தேவைப்பட மாட்டாது. காரின் உட்பகுதியில் அதிக வசதி இருப்பது இதன் மற்றுமொரு சிறப்பம்சமாகும்.அத்துடன், தானியங்கி கியர் தொகுதி இருப்பதன் காரணமாக, பெருந்தெருவில் காரை செலுத்திச் செல்வது மிகவும் இலகுவாக உள்ளது. எரிபொருள் தகனத்தின்போது ஏற்படும் அதிர்வுகள் எதுவும் இதன்போது ஏற்பட மாட்டா.



இத்தொழில்நுட்பமானது, எந்தவொரு மோட்டார் வாகனத்திற்கும், எந்தவொரு விற்பனை சந்தைக்கும், எந்தவொரு காலநிலைக்கும், எந்தவொரு சுற்றாடலுக்கும் ஈடுகொடுக்கக்கூடியது.

இந்த ஹைப்ரிட் ரக கார்கள், தற்போது பாவனையிலுள்ள ஹைப்ரிட் ரக கார்களைவிட ஆயிரம் பவுண்கள் விலை குறைவானதாக இருக்கும். கடந்த இரண்டு ஆண்டுகளாக நூற்றுக்கும் மேற்பட்ட விஞ்ஞானிகளும் பொறியியலாளர்களும் இணைந்து காற்று மூலம் இயங்கும் இந்த காரை உருவாக்கும் முயற்சிகளில் ரகசியமாக ஈடுபட்டு வந்துள்ளனர். இந்த பணிகள் பெரிஸ் நகரத்தின் புறநகர் பகுதியான வெலிசியில் (Velizy) அமைந்துள்ள பியுஜியோ ஆய்வகம் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் நடைபெற்றன.

இந்த புதிய ரக ஹைப்ரிட் கார் தொடர்பான எண்ணக்கரு, பியுஜியோ நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியான பிலிப் செரினக்கின் மனதில் உதித்ததாகும்.

### சாதாரண காரைப் போன்றது...

இந்த புதிய ரக என்ஜின் தொகுதியானது, அதன் வடிவிலும் அளவிலும் மாறுபடாது. எந்தவொரு காருக்கும் இதனைப் பொருத்திக்கொள்ள முடியும். பியுஜியோ நிறுவனம் முதலில் இந்த முறையை சிறிய ரக கார்களிலேயே அறிமுகப்படுத்தவுள்ளது. அதற்கமைய, பியுஜியோ 208 என்ற காரே முதலில் உற்பத்தி செய்யப்படவுள்ளது. இந்த வாகனத்தை செலுத்துவதனூடாக, சுற்றாடலுக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்பட மாட்டாது என்று பியுஜியே நிறுவனம் கூறுகின்றது.

அத்துடன், அழுத்தக் காற்று காரணமாக, வாகனம் விபத்துக்களைச் சந்தித்தால் ஏற்படும் ஆபத்தும் மிகவும் குறைவாகும். காற்று இன்றியோ அல்லது எரிபொருள் தீர்ந்துபோனாலோ இது இயங்காமல் நின்றுவிடாது. மாறாக, அதில் உள்ள விசேட உபகரணம் காற்று எரிபொருள் குறைவாக இருப்பதனை அறிந்துகொண்டு, தானியங்கி முறையில் அக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும். காற்று அழுத்தம் கூடிக் குறைதல் வாகனத்தின் வேகத்திற்கு ஏற்ப மாறுபடும்.இத்தகைய நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய கார்களை உற்பத்தி செய்யும் பியுஜியோ நிறுவனமானது, 1810 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. (ரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முறைசாராத் தொடர்பாடல்





முறைசாரா தகவல் தொடர்பு என்பது முறைசார் தகவல் தொடர்பின் அனைத்து உள்ளடக்கங்களில் இருந்தும் மாறுபட்ட தன்மையைக் கொண்டமைந்ததாகும். நிறுவனம் ஒன்றில் முறைசார் தொடர்பாடலுக்கு வெளியே இடம்பெறுகின்ற தொடர்பாடல் கருமங்கள் முறைசாரா தொடர்பு என குறிப்பிடப்படுகின்றது. மேல்மட்ட அதிகார பீடம் சில சமயங்களில் கீழ்மட்ட ஆளணியினருக்கு தகவலை அனுப்புவதில் தடைகள், சிக்கல் நிலைமைகள் உருவாகின்றபோதும், முறைசார் தொடர்பு செயன்முறை பலவீனம் அடைகின்றபோதும் முன்னெடுக்கப்படுகின்ற தொடர்பாடல் செயன்முறையாக இத்தொடர்பு நிலையை அவதானிக்க முடிகின்றது.

நிறுவனம் ஒன்றில் பொதுவாக காணப்படுகின்ற முறைசார் தொடர்பு நிலைமைகள் பலவீனமடைகின்ற போதோ அல்லது தடைப்படுகின்ற



போதோ ஆளணியினருக்கு அல்லது மக்களுக்கு தகவலைப் பெறுவதற்கான ஓர் ஒழுங்கமைந்த வழிமுறை சாத்தியமற்றதாக அமைகின்றது. அத்தகைய சந்தர்ப்ப சூழ்நிலைகளில் நிறுவனப் பணியாளர் ஏதோ ஒரு வழியில் தகவல்களை பெறுவதற்கும், பரிமாற்றுவதற்கும் முனைவர். அவ்வாறான நிலைமைகளில் முறைசாரா வகையில் வதந்தி, கட்டுக்கதைகள், புறங்கூறுதல், பெயரற்ற பிரசுரங்கள் என்ற வடிவத்தில் தகவல்கள் கிடைக்கப் பெறுகின்றன. அதன் பின்னணியை ஆராய்ந்து மேலும் தகவல்களை பெறுவதற்கு தேடல் செய்ய




முற்படுகின்றனர். அதன் விளைவுகளினால் நிறுவனம் ஒன்றில் முறைசாரா தொடர்பாடல் செயலொழுங்குகள் உருவாக்கம் பெறுகின்றன. பின்வரும் நான்கு நிலைகளில் முறைசாரா தொடர்பு வடிவங்கள் செயற்படும் விதத்தைக் கொண்டு இனங்காணக்கூடியதாகவுள்ளது. இதனை 'GRAPVINE' என்று அழைக்கின்றனர்.

1. தனிச் சங்கிலி முறை (Single Chain)
2. நிகழ்வுச் சங்கிலி (Probability Chain)
3. வதந்தி முறை (Gossip Chain)
4. கொத்தணி முறை அல்லது கோட்டச் சங்கிலி (Cluster Chain)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

**உருக்களுக்கிடையிலான குறையை நிவர்த்தி செய்யுங்கள்.**






**உருக்களுக்கேற்ப குழம்பியுள்ள எழுத்துக்களை சரியாக அமைக்க.**



**Y மற்றும் y எழுத்துக்களை எழுதுவோம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

දුව: **අම්මේ! මගේ ඔලුව හරියට රිදෙනවා.**
அம்மே! மகே ஒலுவ ஹறியட்ட ரிதெனவா.
மகள்: **அம்மா! என்னுடைய தலை மிகவும் வலிக்கிறது.**

අම්මා: **කෝ.. එන්න බලන්න. ආ.. ඔයාට උණ.**
கோ... என்ன பலன்ன. ஆ... ஒயாட்ட உண.
அம்மா: **எங்கே... வாருங்கள் பார்ப்போம். ஆ... உங்களுக்குக் காய்ச்சல்.**

දුව: **මගේ ඇඟත් හරියට රිදෙනවා අම්මේ.**
மகே எங்கத் ஹறியட்ட ரிதெனவா அம்மே.
மகள்: **என்னுடைய உடலும் சரியாக வலிக்கிறது அம்மா.**

අම්මා: **මම ඔයාට පැනඩෝල් දෙන්නම්. බීලා බලමු.**
மம ஒயாட்ட பெனடோல் தென்னம். பீலா பலமு.
அம்மா: **நான் உங்களுக்குப் பெனடோல் தருகிறேன். குடித்துப் பார்ப்போம்.**

දුව: **අම්මේ, කොත්තමල්ලි ටිකක් බිව්වොත් හොඳයිනේ?**
அம்மே, கொத்தமல்லி டிக்கக் பிவ்வொத் ஹொந்தயினே?
மகள்: **அம்மா, கொத்தமல்லி கொஞ்சம் குடித்தால் நல்லதுதானே?**

අම්මා: **මම තම්බලා දෙන්නම්.**
மம தம்பலா தென்னம்.
அம்மா: **நான் அவித்துத் தருகிறேன்.**

**මෙන්න දුව, මේ පැනඩෝල් බීලා නිදාගන්න. අඩු වුණේ නැත්නම් බෙහෙත් ගන්න යමු.**
மென்ன துவ, மே பெனடோல் பீலா நிதாகன்ன. அடுவுனே நெத்னம் பெஹெத் கன்ன யமு.
**இதோ மகள், இந்த பெனடோலைக் குடித்துவிட்டு நித்திரை செய்யுங்கள். குறையாவிட்டால் மருந்து எடுக்கப் போவோம்.**

දුව: **හොඳයි අම්මේ.**
ஹொந்தய் அம்மே.
மகள்: **நல்லது அம்மா.**

### பயிற்சிகள்

**இடைவெளிகளை நிரப்புக.**

1. .............. **හරියට රිදෙනවා.**
2. **ඔයාට** .............. **දෙන්නම්.**
3. **බෙහෙත්** .............. **යමු.**

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

i. தலை வலிக்கிறது.
..........................................
ii. உங்களுக்குக் காய்ச்சல்.
..........................................
iii. அவித்துத் தருகிறேன்.
..........................................






**He, She, It** முதலான பிரதிப் பெயர்ச்சொற்களை (Pronouns) எழுவாய் பகுதியில் கையாண்டு அமைக்கப்பட்ட, இறந்தகால தனி வாக்கியம் மற்றும் நிகழ்கால தனி வாக்கியம் ஆகிய இரண்டு வகை வாக்கியங்களையும் மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

அ) அவன் நேற்று மாலை இங்கே வந்தான்.
He came here yesterday evening.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஆ) அவன் ஒவ்வொரு மாலையும் இங்கே வருகின்றான்.
He comes here every evening.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

* He came. — அவன் வந்தான். | * He comes. — அவன் வருகின்றான்.

இ) அவள் நேற்றுக் காலை இங்கே வந்தாள்.
She came here yesterday morning.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஈ) அவள் ஒவ்வொரு காலையும் இங்கே வருகின்றாள்.
She comes here every morning.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

* She came. — அவள் வந்தாள். | * She comes. — அவள் வருகின்றாள்.

உ) அது நேற்று இரவு இங்கே வந்தது.
It came here yesterday night.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஊ) அது ஒவ்வொரு இரவும் இங்கு வருகின்றது.
It comes here every night.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

* It came. — அது வந்தது. | * It comes. — அது வருகின்றது.

* மேற்படி பிரதிப் பெயர்ச்சொற்களுக்குப் பதிலாக பெயர்ச்சொற்களை எழுவாய் பகுதியில் கையாண்டு அமைக்கப்பட்ட வாக்கியங்கள் வருமாறு;

அ) ரஞ்ஜித் எனது கடைக்கு நேற்று வந்தான்.
Ranjith came to my shop yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஆ) ரஞ்ஜித் எனது கடைக்கு ஒவ்வொரு நாளும் வருகின்றான்.
Ranjith comes to my shop everyday.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

இ) சுஜாதா எனது வீட்டுக்கு நேற்று வந்தாள்.
Sujatha came to my house yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஈ) சுஜாதா எனது வீட்டுக்குத் தினமும் வருகின்றாள்.
Sujatha comes to my house daily.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

உ) This dog came. — இந்த நாய் வந்தது. (Past Tense- இறந்தகாலம்) | * This dog comes. — இந்த நாய் வருகின்றது. (Present Tense- நிகழ்காலம்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஏரியா 51' மர்மம் நீங்கியது...!

அமெரிக்க விமானப்படைக்குச் சொந்தமான 'நெவாடா' பாலைவனப் பகுதியானது, அமெரிக்க படையினர் அணு ஆயுத பரிசோதனைகளை மேற்கொள்ளும் ஓர் இடமாகவே கருதப்படுகின்றது. அத்துடன், இந்த பாலைவனப் பகுதியில் உள்ள 'ஏரியா 51' (Area 51) என்ற இடத்தில்தான் வேற்றுக்கிரகவாசிகள் முதன்முதலாக வந்திறங்கியதாக கடந்த ஆறு தசாப்த காலங்களாக அனைவர் மத்தியிலும் ஒரு கருத்து பரவலாக நிலவிவந்தது. இது தொடர்பில் புகைப்பட சான்றுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும், இந்த விடயம் குறித்து நிலவுகின்ற அச்ச உணர்வு காரணமாக, எவரும் அதுபற்றி ஆராய்ந்தறிய முன்வரவில்லை. எவ்வாறாயினும், அண்மையில் 'ஏரியா 51' தொடர்பான ரகசியத்தை அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஏஜன்சி வெளிப்படுத்தியிருந்தது. பனிப்போர் நிலவிய காலகட்டத்தில் சோவியத் கூட்டரசாங்கத்தை உளவு பார்க்கவென தயாரிக்கப்பட்ட U-2 விமானத்தினைப் பரிசோதித்துப் பார்க்கவே இந்த இடத்தினை தாம் பயன்படுத்தியதாக அந்த தகவலில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன்படி, இப்பகுதியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வேற்றுக்கிரகவாசிகளோ, அவர்களின் விமானமோ கண்டுபிடிக்கப்படவில்லை. அவை தொடர்பான கதைகள் அவர்களின் கட்டுக்கதையாகவே அமைந்திருந்தன.



பறக்கும் தட்டு
வேற்றுக்கிரகவாசிகள் பூமிக்கு வருகை தருவதற்கு தட்டு வடிவிலான, இவ்வாறான விமானங்களைப் பயன்படுத்துவதாகக் கூறியதும், அவற்றை 'பறக்கும் தட்டுக்கள்' என்ற பெயரில் முதன்முதலில் அறிமுகப்படுத்தியதும் அமெரிக்காவாகும்.

**UFO**
Unidentified Flying Object



## 1940
அமெரிக்கா ஆரம்பித்த அணு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட அணுப் பரிசோதனைகள், நெவாடா பாலைவனப் பகுதியிலேயே மேற்கொள்ளப்பட்டன.



நெவாடா பாலைவனப் பகுதியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக அமெரிக்காவினால் பிரபல்யப்படுத்தப்பட்ட வேற்றுக்கிரகவாசியின் சடலம்.









அமெரிக்காவின் மேரிலேண்டில் அமைந்துள்ள தேசிய பாதுகாப்பு ஏஜன்சியின் தலைமைக் காரியாலயமும் அதன் சின்னமும்.



அணு வெடிப்பின் காரணமாக ஏற்பட்ட பாரிய குழிகளையும் பள்ளங்களையும் இங்கு காணலாம்.

அமெரிக்கா 1969 இல் நிலவுக்கு சென்றதாக வெளியான செய்திகள் போலியானவை என்றும், இத்தகைய குழிகளைக் கொண்ட நெவாடா பாலைவனத்தில்தான் ஆம்ஸ்ட்ரோங் தரையிறங்கியதாகவும் அன்று ஒரு கருத்து பரவலாக நிலவியது.

## 1955
அமெரிக்க CIA அமைப்பும் லொக்கீட் மார்ட்டின் விமானத் தயாரிப்பு நிறுவனமும் இங்கு விசேட விமானத் தயாரிப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றினை ஆரம்பித்தன.




வேற்றுக்கிரக விமானங்கள் மற்றும் உயிரினங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாக அவ்வப்போது வெளியான பத்திரிகை செய்திகள் சில...




**THE X FILES**

வேற்றுக்கிரக உயிரினங்கள் மற்றும் விமானங்களை அடிப்படையாக வைத்து, அமெரிக்காவில் நாடகங்கள் மற்றும் திரைப்படங்கள் வெளியாகின.

## 1982
வேற்றுக்கிரகத்தில் இருந்து வரும் உயிரினம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு ஸ்டீவன் ஸ்பில்பேர்க் தயாரித்த E.T- The Extra Terrestrial என்ற திரைப்படம் உலகம் முழுவதும் பெரும் வெற்றி பெற்றது.





U2S-TR-1A ரக விமானம்

ஒவ்வொரு விமானமும் பறக்கும் உயரத்தின் அளவு

| | |
|---|---|
| அடி 60,000 | U-2 விமானம் |
| அடி 35,000 | |
| அடி 30,000 | பயணிகள் விமானம் |
| அடி 25,000 | |
| அடி 20,000 | |
| அடி 15,000 | |
| அடி 10,000 | இலகுரக விமானங்கள் |
| அடி 5000 | |
| கடல் மட்டம் | |

இந்த உயரத்தினைத் தவிர அதிகபட்சம் 90,000 அடி வரை பறக்கக்கூடிய ஆற்றல் இந்த விமானங்களுக்கு உண்டு.





அதிகபட்ச உயரத்துக்குச் சென்றடையும்போது, பூமியின் சுழற்சியை விமானியால் அவதானிக்க முடியும்.

### U-2 ரக விமானங்களில் நிகழ்ந்த முன்னேற்றங்கள்

U-2 ரக விமானங்கள் உயர் வானில் பறந்து செல்லும்போது, அதன் கீழாகப் பறந்து செல்லும் பயணிகள் விமானத்தின் விமானிகள், U-2 ரக விமானத்தில் இருந்து வெளிப்படும் ஒளியைப் பார்த்து அவற்றைப் பறக்கும் தட்டுக்கள் என்று நம்பினர். சாம்பல் நிறத்திலான இந்த விமானங்கள், பிற்காலத்தில் கறுப்பு நிறத்தினைக் கொண்ட விமானங்களாக மாற்றப்பட்டமைக்கான காரணமும் இதுவே ஆகும்.

**1955 - U2A**



தயாரிக்கப்பட்ட முதல் விமானம்.

**U2B**



இரண்டு ஆசனங்களைக் கொண்ட இந்த விமானம், ஒரு பயிற்சி விமானமாகும்.

**U2C**



நவீனமயப்படுத்தப்பட்ட ஆசனம் கொண்ட விமானம்.

**U2E/F**



வான் பரப்பில் எரிபொருள் நிரப்பும் வசதி கொண்டது.

**U2G**



யுத்தக் கப்பலில் தரை இறக்கும் வசதி கொண்ட விமானமாகும்.

**U2R**



புதிதாக நவீனமயப்படுத்தப்பட்ட U-2 விமானம்.




நெவாடா ஆராய்ச்சி வலயத்திற்குள் பிரவேசிப்பதனை தடை செய்யும் அறிவித்தல் பலகை.

-(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி



அறிவுக்கண்ணைத் திறப்பது கல்வி
இறைவனின் கொடையாம் அற்புதக் கல்வி
பரந்த அகிலத்தை ஆழ்வதும் கல்வி
விந்தைகள் புரிந்து உன்னை உயர்த்துவதும் கல்வி!

வாழ்வில் செல்வம் சேர்த்திடும் கல்வி
மறவாத இன்பத் தீஞ்சுவை கல்வி
பொங்கும் புலனாய் பொழிந்திடும் கல்வி
மங்கள ஒளிவிளக்கே வளமான கல்வி!

தங்கத் தமிழை வளர்த்த கல்வி
பூமி எங்கும் நிறைந்த கல்வி
எங்கும் எதிலும் வெல்வது கல்வி
உயர்வு பெற்றிட
துணையான கல்வி!

ஜெ.லதுர்ஷாந்தி,
கார்மேல் பற்றிமா தே.பட.,
கல்முனை.

# கூடைப்பந்தாட்டத்தின் அறிமுகம்



**1891** ஆம் ஆண்டு அமெரிக்காவின் கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தின் ஆலோசகரான பேராசிரியர் ஜேம்ஸ் நெய்ஸ்மித் என்பவரால் கூடைப்பந்தாட்டம் தோற்றம் பெற்றது. கூடைப்பந்தாட்டம் மிகவும் வேகமாக விளையாடப் படும் ஒரு விளையாட்டாகும். இவ்விளையாட்டு உடலின் அனைத்து உறுப் புக்களையும் செயற்படுத்தக் கூடியது.

இதில் ஓர் அணிக்கு ஐந்துபேர் வீதம் இரண்டு அணிகள் களத்தில் இருப்பதுடன், அணி யின் மொத்தப் பலமான பத்து முதல் 12 பேர்களில் இருந்து எப்பொழுது வேண்டு மானாலும் களத்தில் விளையாடும் ஒருவரை அழைத்து, பதிலுக்கு இன்னொருவரை களத்திற்கு அனுப்பலாம். உலகின் பல நாடுகளில் ஆர்வத்துடன் விளையாடும் விளையாட்டு கூடைப்பந்தாகும். 'FIBA' பன்னாட்டு கூடைப்பந்தாட்டக் கூட்டணி என்பது உலகின் மிகப்பெரிய பன்னாட்டு கூடைப்பந் தாட்டச் சங்கமாகும்.

என்.எஃப்.அஃப்ஸானா,
மட்/ஓட்டமாவடி பா.பா.ம.வித்.,
ஓட்டமாவடி.

# எது நல்லது?





ஒரு தடவை துறவி ஒருவர் தனது சீடர்களுடன் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அப்போது அவருடைய சீடர்களில் ஒருவருக்கு ஒரு கேள்வி தோன்றி யது. அவர் துறவி யைப் பார்த்து, ''குருவே, நான் தாங் கள் கூறியபடியே பிச்சையெடுக்கும் போது சிலர் என்னைப் பார்த்து ஏசுகிறார்கள். தகாத வார்த்தைகளைப் பேசுகிறார் கள். இதற்கு என்ன செய்வது?''என்று கேட்டார்.

அந்தத் துறவி சிரித்துக் கொண்டே, ''நல்லதென்றால் வைத்துக்கொள்.... இல்லை யென்றால் அதை உடனே மறந்துவிடு'' என்றார். சீடரோ, ''இது எனக்குப் புரியவில்லையே...'' என்று இழுத்தார்.

துறவி அதனை விளக்குவ தற்கு ஒரு கதையைக் கூற ஆரம்பித்தார்.

ஒரு கிராமத்தில் விவசாயி ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரு செல்ல மகன். அவர்கள் வீட்டில் மாடு, கழுதை, கோழி போன்ற விலங்கு களும் பறவைகளும் இருந்தன. ஒருநாள் அச்சிறுவன் விளையாட்டாக ஒரு கழுதையின் வாலைப் பிடித்து இழுத்துவிட்டான். கோபம்கொண்ட கழுதை அவனை ஓங்கி உதைத்துவிட்டது. விவசாயி முன்கோபக்காரர். அதனால், மகனை உதைத்த கழுதை யைத் தண்டிக்க எண்ணினார்.

ஒரு பெரிய பள்ளத்தில், கழுதையைத் தள்ளிவிட்டார். பின்னர் அருகிலிருந்த மண் குவியலில் இருந்து மண்ணை உள்ளே தள்ள ஆரம்பித்தார். கழுதை யோசித்தது. விவசாயி மண்ணைப் போடப் போட அதிலிருந்து தனது கால்களை விடுவித்துக்கொண்டு விழுந்த மண்மீது ஏறி நிற்க ஆரம்பித் தது. இவ்வாறே, விவசாயி மண்ணைத் தள்ளத் தள்ள அதனால் உண் டான மேட்டின் மேல் கழுதை ஏறி நின்று கொள்ள ஆரம்பித்தது.

இப்படியே செய்து பள்ளம் முழுவதும் மண் நிரம்பினாலும் கழுதை மண்மீது ஏறி, ஏறி, இறுதியில் வெளியேயும் வந்துவிட்டது. விவசாயியின் கைகளில் சிக்கா மல் ஓடி மறைந்து போனது. இந்தக் கதையைச் சொல்லி முடித்தவுடன், துறவி சிரித்துக் கொண்டே, ''இப்போது புரிந் திருக்குமே! உனது கேள்விக் கும் விடை கிடைத்திருக்குமே'' என்று கேட்டார். சீடருக்கு எல்லாம் புரிந்துபோயிற்று. துறவியும் சிரித்துக்கொண்டே தனது பயணத்தைத் தொடர்ந் தார்.




# உங்களுக்குத் தெரியுமா?

| நோய் | நோய் காவப்படும் விதமும், நோய் பற்றிய தகவல்களும் |
|---|---|
| Chicken Pox (சின்னம்மை) | நோயாளியுடன் தொடுகையால் பரவும். அரிதாக இறப்பை ஏற்படுத்தும். தடைப்பால் உண்டு. குணமாக்க மருந்தில்லை. |
| Polio (போலியோ) | மைய நரம்புத்தொகுதி பாதிக்கப்பட்டு பாரிசவாதம், இறப்பு ஏற்படலாம். |
| Mumps (கூகைக்கட்டு) | உமிழ்நீரால் பரவும். Vaccine உண்டு. மருந்து இல்லை. இறப்பு குறைவு. |
| Rabies (விசர்நாய்க் கடி) | விலங்குகள் கடிக்கும்போது பரவும். இறப்பை தோற்றுவிக்கலாம். |

எஸ்.சரண்யா, விவேகானந்த பெண்கள்.ம.வித்., கல்லடி.

# உலகத்தை அறியலாம்

- பெண்களுக்கு வாக்குரிமை அளித்த முதல் நாடு - நியூஸிலாந்து
- உலகிலேயே மிகப் பெரிய சிறைச்சாலை உள்ள நாடு - ரஷ்யா
- ப்ளாஸ்டிக் பாலம் கட்டியுள்ள நாடு - ஸ்கொட்லாந்து
- உலகில் இறப்பு விகிதம் குறைவான நாடு - குவைட்
- அமைதிக்காக நொபெல் பரிசு வழங்கும் நாடு - நோர்வே
- உலகில் மிகச் சிறிய தேசிய கீதத்தினைக் கொண்ட நாடு- ஜப்பான்
- தேசிய கொடியை முதலில் உருவாக்கிய நாடு - டென்மார்க்

அஸ்னா பிஷ்ரி,
சீனன் கோட்டை,
பேருவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





'நடராஜ் அறிவுக்கு விருந்து' பகுதியிலுள்ள 1, 2, 3 ஆகிய போட்டிகளுக்கான விடைகளை தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி, 21.05.2014 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.

நடராஜ் அறிவுக்கு விருந்து - 24
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


பரிசுப் பொதி
1ஆம் பரிசு ரூ. 700/=
2ஆம் பரிசு ரூ. 500/=
3ஆம் பரிசு ரூ. 300/=

நடராஜ் அறிவுக்கு விருந்து போட்டிகளுக்கான விடைகளை அனுப்பும்போது, உங்கள் பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலை, நகரம் என்பனவற்றை கட்டாயம் எழுதி அனுப்புங்கள்.

## வழி காட்டுங்கள்




3



படங்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை அருகிலிருந்து தெரிவுசெய்து, தரவுகளுக்கேற்ப உரிய கட்டங்களில் எழுதுக

1




## குறுக்கெழுத்துப் போட்டி இல. 85

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | |
| | | | | | 3 |
| | | | | 4 | |
| 5 | | 6 | 7 | | |
| | | | | | 8 |
| | 9 | | | | |

### மேலிருந்து கீழ்

01. மயானம்.
02. புத்தளம் மாவட்டத்திற்குட்பட்ட ஒரு மாநகரம்.
03. நள்ளிரவு.
06. பசியோடிருத்தல். (தலைகீழ்)
07. அன்பு, மென்மை, பரிவு போன்ற உணர்வுகளின் வெளிப்பாடு.
08. மலர்.

### இடமிருந்து வலம்


01. துறவி.
03. மதி. (மாறியுள்ளது)
04. இது வந்தால் பத்தும் பறந்திடும் என்பர்.
05. அநாதரவானோரைப் பொறுப்பேற்றுக் காக்கும் இடம்.
09. 'முன்னுரை' என்றும் பொருள்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 84 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | 2 கோ | ண | 3 ம | லை |
| ரு | | டை | | ரு | |
| டி | | | 4 ச | த | ம் |
| | | 5 வ | | ம் | |
| 6 பா | | ரி | 7 தி | | 8 நா |
| 9 தி | னை | | 10 ஆ | யு | ள் |

## உருக்களின் எண்ணிக்கையில் வட்டமிடுக

2



10 6 8
7 8 9
6 7 5
8 7 9
6 9 8

## நடராஜ் அறிவுக்கு விருந்து - 22 விடைகள்

போட்டி: 01



போட்டி: 02



01. இழுபறி
02. குரல்வளம்
03. அருவருப்பு
04. நிழற்படம்
05. வெற்றிடம்

போட்டி: 03



## நடராஜ் அறிவுக்கு விருந்து - 22 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1ஆம் பரிசு
ஏ.ஆர்.அன்ஹா, மருதமுனை-02.

2ஆம் பரிசு
மயூரன் ஜெயசீலன், பதுளை.

3ஆம் பரிசு
ஆதிப் அஹமட், ஹெட்டிபொல.

பாராட்டுப் பெறுவோர்:
* புஷ்பா குமார், நிவிதிகல.
* எம்.ரிம்சான், நாச்சியாதீவு.
* த.அக்ஷயா, மட்டக்களப்பு
* வை.அரவிந்தன், நீர்கொழும்பு.
* ஆசியா பவாஸ், எழுவில.
* எம்.நபீல், மூதூர்-05.
* எம்.இல்மா, கெக்கிராவை.
* சி.நரேன், சுங்காவில.
* எஃப்.நதா, தெஹிவளை.
* எஸ்.மாருதி, பொகவந்தலாவை.

Sponsored by
NATARAJ
Packsco Ceylon (Pvt) Ltd, P.O Box-165, Colombo-03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உலக சனத்தொகை அதிகரிப்பு



உலக சனத்தொகை அதிகரிப்பானது, எதிர்வரும் காலங்களில் பாரிய சிக்கல்களையே ஏற்படுத்த உள்ளதாக எதிர்வுகூறப்படுகின்றது. அதிகரித்து வரும் சனத்தொகைக்கு ஏற்ப உலக பொருளாதார நிலை பலவீனம் அடைந்திருப்பதும் சுத்தமான உணவு-நீர் என்பனவற்றைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் பாரிய பின்னடைவுகளுமே இதற்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன.

அத்துடன், அதிகரித்து வரும் உலக சனத்தொகையால் ஏழ்மை, பட்டினி, யுத்தங்கள் என்பன ஏற்படுவதற்கான சாத்தியங்களும் அதிகமாகவே உள்ளன. உலக சனத்தொகையானது, 2010 ஆம் ஆண்டளவில் 677 பில்லியனாக இருந்தது. இது உலக குடித்தொகைப் பெருக்கத்தில் 2.2 வீதமாகும்.

2009 இல் உலகில் 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்தது. 2008 இன் முடிவில் 50 கோடி 60 இலட்சமாக இருந்த முதியோர் தொகை, 2040 இல் 130 கோடியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது 33% அதிகரிப்பாகும். இது 5 வயது சிறார்களின் தொகையை விட அதிகமாகவே காணப்படுகின்றது. பிறப்பு வீதம் அதிகளவில் அதிகரிப்பதும் அதி நவீன மருத்துவ முன்னேற்றத்தால் இறப்பு வீதம் குறைவடைதலும் சனத்தொகை அதிகரிப்புக்கு துணை போவதாகவே கருதப்படுகின்றது. மருத்துவ முன்னேற்றம் ஆரோக்கியமான விடயமாகக் காணப்படினும், அதிகரித்து வரும் சனத்தொகைப் பெருக்கமானது, ஆரோக்கியமான விடயம் அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது.






ஹெம்மாதகம- பள்ளிப் போர்வையைச் சேர்ந்த ராஸிக்-சமீரா தம்பதியரின் செல்வப் புதல்வன் அம்மார், தனது ஐந்தாவது பிறந்தநாளை 04.05.2014 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர், சகோதர சகோதரிகள் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

**விஜய் 'விழா உலா'**
**த.பெ.எண் 2037**
**கொழும்பு**



வெலிகாமம் கோட்டகொடையைச் சேர்ந்த ருதைன்-ருக்ஸானா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா ரும்தா, தனது பிறந்தநாளை 05.05.2014 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர், உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.




அனுப்ப வேண்டிய முகவரி:
**கைவண்ணங்கள்**
**த.பெ.எண் 2037**
**கொழும்பு**



எம்.அத்திக்,
சது/கஸ்ஸாலி மு வித்.,
சம்மாந்துறை.




ச.வர்நேந்திரன்,
மட்/ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்த தம்பி வித்., ஆரையம்பதி.



சி.பெர்னாடின் எறிக்,
சென்/ஜோன் பொஸ்கோ வித்.,
யாழ்ப்பாணம்.



எம்.சப்றீன்,
தெல்தெனிய மு.வித்., பலகொல்ல.




அ.மரியடிசோன்,
சுதந்திரபுரம் அ.த.க.பாட.,
உடையார்கட்டு.



ஜெ.கலைப்பிரியன்,
யா/வல்வை மகளிர் ம.வித்.,
வல்வை.



நவாஸ் ரஹ்மானியா,
கலாதெனிய,
உடதலவின்ன மடிகே.



ந.ஹசீனா பேகம்,
ஆமிஷா பாலிகா.ம.வித்.,
அக்கரைப்பற்று.

# நல்ல நண்பர்கள்

உண்மையான, நம்பிக்கையான நண்பர்கள் கிடைப்பது ஒரு வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும். உங்களை சுற்றி நிற்பவர்களில் நீங்கள் நண்பர்களாக கருதும் எத்தனை பேர் உண்மையான, நம்பிக்கையான நண்பர்கள் என்பதை நீங்களே ஆராய்ந்து தீர்மானிக்க வேண்டும். நல்ல நண்பர்களாகக் கருதப்படுபவர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கும் கல்விச் செயற்பாட்டிற்கும் என்றும் உறுதுணையாக நிற்பார்கள். தேவையற்ற பந்தாக்களைச் செய்பவர்களும் தேவையற்ற செலவுகளை, தீய பழக்கங்களை செய்யத் தூண்டுபவர்களையும் நீங்கள் பிரயோசனமற்ற, போலியான நண்பர்கள் என்று இனங்காண முடியும்.



குறிப்பாக, மாணவர்களாகிய நீங்கள் உங்களுக்கு விசுவாசமான, உண்மையான நண்பர்கள் யாவர்? தீய நண்பர்கள் யாவர்? என்பதை இனங்காணத் தெரிந்திருத்தல் வேண்டும். இதற்கு பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டல்கள் உறுதுணையாக அமைகின்றன. அந்தவகையில் நல்ல நண்பர்களின் குணாதிசயங்கள் கீழ்வருவனவாக அமைந்திருப்பதைக் காணலாம்.



* தீய வழியில் உங்களை செல்ல விடாது தடுப்பவர்கள்.
* துன்பத்தின்போது உங்களை விட்டு விலகாதவர்கள்.
* கல்விச் செயற்பாடுகளில் உங்களுக்கு உறுதுணையாக இருப்பவர்கள்.
* தேவையற்ற பந்தாக்களை செய்யாதிருப்பவர்கள்.
* உங்கள் முன்னேற்றத்தில் அதிக அக்கறை உள்ளவர்கள்.
* உங்கள் வெற்றியின் போதும் உங்கள் சிறப்பு நிகழ்வுகளின்போதும் வாழ்த்துத் தெரிவிப்பவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியப்பான சிரிப்பொலியையுடைய 'ஹைனா'


ஹைனாவின் பற்கள்

விலங்குகள் உலகம் மிகவும் வியப்பானது. அவற்றின் இயல்புகள், நடத்தைகள் மற்றும் ஒலிகள் என்பன ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாகும். இவ்வாறு திறந்தவெளிகளில் வசிக்கும் ஹைனாக்களுக்கும் அவற்றுக்கு என பிரத்தியேகமான சிரிப்பு ஒலி ஒன்று உள்ளது. இந்த சிரிப்பானது, மிகவும் நகைச்சுவைமிக்க வியப்பூட்டும் சிரிப்பாகும். ஆபிரிக்காவின் திறந்த புல்வெளிகளில் கேட்கும் இந்த சிரிப்பொலிகளின் உரிமையாளர்கள் இந்த ஹைனாக்களாகும்.

அளவில் பெரிய ஹைனாக்கள் உடலில் புள்ளிகள் கொண்ட ஹைனாக்களாகும். இந்த மூன்று இனங்களுக்கும் பெரிய பரந்தளவிலான தலை காணப்படுகின்றது. இவற்றின் முன்னங்கால் மற்றும் தோள் பகுதி மிகவும் சக்தி வாய்ந்தது. பின்னங்கால்கள் சற்று குள்ளமானதாகும்.

ஹைனாக்கள், ஓநாய்கள் போன்ற தோற்றம் கொண்டவை. இவை பூனைகள் இனத்தைச் சேர்ந்தவையாகும். மற்ற விலங்குகளின் இரைகளை விரும்புதல், இறந்த சடலங்களை புசித்தல், மறைவான நடத்தைப் பாங்கு என்பன இவற்றின் இயல்புகளாகும். எனினும், இவை எப்பொழுதும் மற்ற விலங்குகளின் இரைகளில் தங்கியிருப்பவை அல்ல.

## உணவு

ஏனைய விலங்குகள் உணவாக்கிக்கொண்ட இரையின் மிச்சசொச்சங்களை உட்கொள்வதே ஹைனாவின் பழக்கமாகும். ஆனால், இவை கூட்டமாக சேர்ந்து சிறிய கெசல் மான்கள், வில்ட்பீஸ்ட் குட்டிகள் மற்றும் வரிக்குதிரைகள் என்பனவற்றை வேட்டையாடுகின்றன. தனியாக வேட்டையாடினாலும், கூட்டமாக வேட்டையாடும்போதே ஹைனாக்கள் சக்தியை வெளிப்படுத்துகின்றன.

## பலம் வாய்ந்த தாடைகள்

புள்ளிகளைக்கொண்ட ஹைனாக்களின் உணவில் விலங்குகள் அதன் எலும்புகள், பிரதானமாக அமைகின்றன. பிற மாமிச பட்சிகள் உட்கொள்ளாத விலங்குகளின் கொம்புகள் மற்றும் தந்தங்கள் ஆகியவற்றையும் ஹைனாக்கள் உட்கொள்கின்றன. இவற்றின் உணவு உட்கொள்ளும் முறைக்கு ஏற்ப அவற்றின் பற்களும் தாடையும் மிகவும் சக்தி வாய்ந்ததாக அமையப்பெற்றுள்ளன.

## ஹைனா இனங்கள்

ஹைனா குடும்பத்தில் பிரதான மூன்று இனங்கள் உள்ளன. ஆனால், சிலர் Aardwolf என்ற ஓநாய் இனத்தையும் ஹைனா இனத்தில் சேர்க்கின்றனர். ஹைனா இனங்களாக புள்ளி ஹைனாக்கள், வரி ஹைனாக்கள், கபில நிற ஹைனாக்கள் கருதப்படுகின்றன. Aardwolf எனப்படும் ஓநாய்கள் கறையான்களை உட்கொள்ளும் ஆபிரிக்க பாலூட்டி விலங்காகும். சில சந்தர்ப்பங்களில் அவை வேறு குடும்பத்தைச் சேர்ந்த இனமாகவும் கருதப்படுகின்றது. புள்ளி மற்றும் வரிகள் கொண்ட ஹைனாக்கள் ஆபிரிக்காவிலும், ஆசியாவிலும் வசிக்கின்றன. மண்ணிற ஹைனாக்களும் Aardwolf ஹைனாக்களும் தென் அமெரிக்காவில் வசிக்கின்றன.

## வரிகளைக்கொண்ட ஹைனாக்கள்

புள்ளிகளைக்கொண்டஹைனாக்களுடன் ஒப்பிடுகையில்,இவற்றின் உடல் அளவில் சிறியதாகும். இந்தியாவிலிருந்து மத்திய கிழக்கு வரையிலும், தன்சானியாவின் தென்


ஹைனாக்களின் தாடை

பகுதியிலும் இவை வசிக்கின்றன.

இவை புள்ளி ஹைனாக்கள் அளவுக்கு வன்முறைக் குணம் கொண்டதல்ல. இவை தனித்து வாழும் தன்மை கொண்டவை.

## Aardwolf

மிகவும் பயந்த சுபாவம் கொண்ட இந்த ஹைனாக்கள் மற்ற விலங்குகளினால் கைவிடப்பட்ட தரைகீழ் பொந்துகளில் பகல்பொழுதில் மறைந்திருக்கும். இவற்றின் தலைப்பகுதி மிகவும் பலவீனமானது. சிறியதும் விலகியதுமான பற்கள் அமைப்பினைக் கொண்டது. நீண்டதும் நெகிழ்வானதுமான நாவினைக் கொண்டது.



## கபிலநிற ஹைனா

பாலைவனத்தில் வசிக்கும் விலங்கினமாகும். மறைந்து வாழும் தன்மையுடன் பயந்த சுபாவமும் கொண்டது. இவை தென்னாபிரிக்காவில் (குறிப்பாக நமீபியாவிலும் பொட்ஸ்வானாவிலும்) வசிக்கின்றன.

## புள்ளி ஹைனாக்கள்

ஹைனா குடும்பத்தில் அதிக உறுப்பினர்களைக் கொண்டது. மிகவும் வன்முறையான மூர்க்கக் குணம் மிக்கது. இவை பெரியளவிலான திறந்தவெளிப்பகுதிகளில் வசிப்பதுடன், வனாந்தர எல்லைப் பகுதிகளிலும் வசிக்கின்றன.

## ஹைனா குட்டிகள்

நிலத்தின்கீழ் உள்ள குகைகளில் ஒரு தடவையில் 2 முதல் 3 குட்டிகளை ஹைனாக்கள் ஈனுகின்றன. பிறந்த குட்டிகளின் பார்வைத்திறன் மிகவும் வேகமாக வளர்ச்சி பெறுகின்றன. தாயின் அரவணைப்பு அவற்றுக்கு எப்பொழுதும் கிடைக்கின்றது. ஏனைய ஹைனாக்கள் உணவு தேடிச் செல்லும்போது குட்டிகளின் பாதுகாப்புக்கென பெண் ஹைனா குகையில் தங்கியிருக்கும். 18 மாதங்கள் வரை குட்டிகள் தாய்ப்பால் அருந்துகின்றன.

விஞ்ஞானப் பெயர்: ***Crocuta Crocuta***

பேரினம்: ***Crocuta***

குடும்பம்: ***Hyaenidae***

பரவுகை: வட/கிழக்கு ஆபிரிக்கா மற்றும் ஆசியாவின் தென் பகுதி.

வாசஸ்தலம்: திறந்த புல்வெளிகள்

உணவு: இறந்த விலங்குகளின் உடல், வரிக்குதிரை, அன்டிலொப் மற்றும் கெசல் மான்கள் என்பனவற்றை வேட்டையாடும்.

அளவு: தோள்வரை உயரம் 79 செ.மீற்றர். நிறை 80 கி.கிராம்.


ஆயுட்காலம்: 20 ஆண்டுகள்.


கபிலநிற ஹைனா


புள்ளி ஹைனா


Aardwolf


வரிகளையுடைய ஹைனா


சிறிய கெசல் மானை வேட்டையாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரணரான நீங்கள், பங்குபற்றும் வழிப்பயணங்களின்போதும், வனாந்தர ஆய்வுப் பயணங்களின்போதும் நிகழும் தவறுகளினால் வழி தவறிவிடக்கூடும் சந்தர்ப்பத்தை எதிர்கொள்ள நேரிடும். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தை நீங்கள் எதிர்கொள்ள நேரிட்டால், நீங்கள் எவ்வாறான வழிமுறைகளைக் கையாள வேண்டும்? சரியான வழிப்பாதையினைக் கண்டுபிடிக்க என்ன செய்ய வேண்டும்? ஆகிய கேள்விகளுக்கு முதலில் விடை தேட வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகளை அறிந்துகொள்ள நீங்கள் STOP என்ற கோட்பாட்டை அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.



# வனாந்தரத்தில் வழிதவறிவிட்டால்...


## STOP கோட்பாட்டை அறிந்துகொள்வோம்

S - Sit down

T - Think

O - Observe

P - Prepare



விஜய் சாரணர் உலகம்

### நிற்கும் இடத்தில் அமர்ந்து கொள்ளுங்கள்



நீங்கள் வழிதவறி விட்டீர்கள் என்பதனை உணர்ந்துகொண்டதன் பின்னர் தொடர்ந்து நடப்பதனை நிறுத்துங்கள். நன்கு காற்றோட்டமான இடத்தில் அமர்ந்துகொண்டு, மேலும் சிலர் உங்களுடன் இருந்தால், அவர்களை அழைத்துக்கொள்ளுங்கள். அமைதியாக இருந்து மனதை ஆசுவாசப்படுத்திக்கொள்ளுங்கள். பின்னர் நிலைமையை அனைவருக்கும் எடுத்துக்கூறுங்கள். அவசரப்படுவதனாலும் பதற்றமடைவதனாலும் பயன் இல்லை என்பதனை தெளிவுபடுத்துங்கள்.

ஓரிடத்தில் அமர்ந்து அனைவரது துணிவையும், தன்னம்பிக்கையையும் ஊக்குவிக்கும் வகையில் செயற்படுங்கள். இது பயணத்தை முன்னெடுக்கும் ஒரு சாரணர் தலைவரின் கடமையும், பொறுப்பும் ஆகும்.

### சிந்தியுங்கள்



நீங்கள் எப்பொழுது எந்த இடத்தில் தவறிழைத்தீர்கள் என்று சிந்தித்துப் பாருங்கள். அந்த இடத்திற்கு மீண்டும் திரும்பிச் செல்ல முடியுமாயின், செல்லுங்கள். அவ்வாறு செல்வது தொடர்பில் உங்களுக்குத் தெளிவில்லை எனின், பயணப்பையில் உள்ள வரைபடத்தினை (Map) பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

கேட்கும் ஒலிகள் மற்றும் பார்க்கும் பொருட்களை நன்கு நுணுக்கமாக அவதானியுங்கள். உங்களது குழுவில் உள்ள சாரணர்கள் சிலருக்கு சில பொறுப்புகளை வழங்குங்கள். நீங்கள் வழிதவறிய இடத்திலிருந்து பொருட்களைக் கண்காணிக்கவும், தரைப்பகுதி வேறுபாடுகளை அறியவும் ஆலோசனை வழங்குங்கள். நீங்கள் பெருந்தெருப்பகுதியில் வழி தவறி இருந்தால், இந்த விடயங்களை கண்காணிப்பதற்கு இலகுவாக அமையும்.

### வடதிசையை அறிந்துகொள்ளுங்கள்



உங்களிடம் திசைகாட்டும் வரைபடத்தினால் சரியான வழிப்பாதையை அறிந்துகொள்ள முடியும். வடதிசையினை உறுதிசெய்துகொள்ளுங்கள். திசைகாட்டும் கருவி உங்களிடம் இருக்குமாயின், நீங்கள் இருக்கும் இடத்தினை துல்லியமாகக் கண்டறிய முடியும்.

### இரவாகப் போகின்றதா?

வழி தவறிவிட்ட நீங்கள் பகற்பொழுதில் மட்டுமே வனப்பகுதியில் நடமாட வேண்டும். குறைவான வெளிச்சத்தில் நடமாடுவது ஆபத்து மிக்கது. அதனால், வழி தவறிய இடத்திற்கு அருகாமையில் பாதுகாப்பான இடத்தில் இரவைக் கழிப்பதுதான் உகந்தது. இதனால், இரவாகும் முன்னர் இரவைக் கழிப்பதற்கான தயார்படுத்தல்களை செய்துகொள்ளுங்கள். இதற்கென தீப்பந்தம், மழை, பனியிலிருந்து பாதுகாப்புப் பெற கூடாரம், இரவு உணவு, நெருப்பு



மூட்டவும் இரவு முழுவதும் எரிக்கத் தேவையான விறகுகள், அருந்த சுத்தமான நீர் என்பனவற்றை சேகரித்துக் கொள்ள அக்கறை கொள்ளுங்கள். இதற்காக தேவையற்ற முயற்சிகளையும், நேர வீணடிப்புகளையும் மேற்கொள்ளத் தேவையில்லை. மாறாக, வழிதவறிய அனைவரும் ஒன்றாக இருப்பதே அவசியமாகும் என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்.

### தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்துங்கள்






கைத்தொலைபேசி, வோக்கிடோக்கி உபகரணம், மடிக் கணினி ஆகிய ஏதேனும் உபகரணம் ஒன்றைப் பயன்படுத்தி உங்கள் பெற்றோர், உறவினர் அருகில் உள்ள பொலிஸ் நிலைய அதிகாரிகள் ஆகியோருக்கு அறிவியுங்கள். மின்னஞ்சல், குறுஞ்செய்தி, தொலைபேசி உரையாடல், சமிக்ஞைகள், புகை என்பனவற்றை இதற்காகப் பயன்படுத்த முடியும். உதவி கேட்டு கத்தி அலைந்து திரிவதால் பயனில்லை என்பதனை உணர்ந்துகொள்ளுங்கள். இதனால், வனப்பகுதிகளில் உள்ள வனவிலங்குகள் அமைதி இழக்கக்கூடும். வனவிலங்குகள் அமைதி இழப்பது உங்களுக்கு தீங்கு தரும் விடயமாகவே அமையும்.

### விடியற்பொழுதில் எழுந்திருங்கள்

களைப்பு நீங்கி உற்சாகமாக காலைப்பொழுதில் எழுந்து மீண்டும் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும். இதற்கென நீங்கள் சரியான பாதையை அறிந்துகொள்ள வேண்டும். சரியான திசையை அறிவதனூடாக சரியான பாதையை தெரிந்துகொள்ள முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரப்பான் பூச்சிகளைக் கொண்டு புற்றுநோய்க்கு மருந்து தேடல்



கரப்பான் பூச்சிகளை அனேகமான வீடுகளில் காணப்படக்கூடியதாக இருக்கும். பலபேருக்கு கரப்பான் பூச்சியைக் கண்டாலே அறுவருப்புத்தான். இத்தகைய கரப்பான் பூச்சிகளைப் பற்றிய சில விபரங்களைப் பார்ப்போம்.

கரப்பான் பூச்சிகள் உலகின் துருவப்பகுதிகளைத் தவிர்ந்த ஏனைய எல்லாப் பகுதிகளிலும் பரவிக் காணப்படுகின்றன. 6 வகையான குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 3,490 கரப்பான் இனங்கள் இப்பொழுது வாழ்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. கரப்பான் பூச்சிகள் எதையும் உண்ணும் அனைத்துமுண்ணிகளாகும். இவற்றை நாம் மிதிக்கும்போதோ, நசுக்கும்போதே இதன் உடலில் இருந்து வெள்ளை நிறத்திலான ஒரு திரவம் வெளிவருவதைப் பார்த்திருப்பீர்கள். இதுதான் கரப்பானின் குருதி ஆகும். இதன் குருதி ஏன் சிவப்பு நிறமாக இல்லை என்ற கேள்வி எழலாம்.




இதன் இரத்தத்தில் ஹீமோக்ளோபின் இல்லாததால்தான் வெள்ளை நிறமாக காணப்படுகின்றது. கரப்பானின் உடல் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றின் ஒவ்வொரு பகுதியிலும் அதனைக் கட்டுப்படுத்தும் நரம்புத்திரள்கள் காணப்படுகின்றன. இதனால், கரப்பான் பூச்சியின் தலையை வெட்டிவிட்டால்கூட அது இரண்டு வாரகாலத்திற்கு உயிர்வாழும் தன்மையைக் கொண்டுள்ளது. அணுகுண்டு வெடித்தும் பாரிய அழிவுகள் ஏற்பட்டாலும்கூட கரப்பான் பூச்சிகள் அழியாமல் உயிர்வாழும் என்றும் கருதப்படுகின்றது.

## உணவாகும் கரப்பான்





இவற்றைவிட ஆச்சரியம், சீனாவில் கரப்பான் பூச்சியை அறுசுவை உணவாக உட்கொள்கின்றனர். இதன் காரணமாக, கரப்பான் பூச்சிப் பண்ணைகளை நடத்தி சீனாவில் பலர் கோடி கோடியாகப் பணம் சம்பாதிக்கின்றனர். கரப்பான் பூச்சி, வெட்டுக்கிளி, சில வகை காட்டுப் புழுக்கள் ஆகியவற்றை சீனாவில் வறுத்துச் சாப்பிடுகின்றனர். இன்னும் சிலர் கரப்பான் பூச்சிகளை உலர வைத்து அவற்றைக்கொண்டு சீன மருந்து வகைகள், அழகுசாதனப் பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிக்கவும் பயன்படுத்துகின்றனர். இருட்டான இடங்களை கரப்பான் பூச்சிகளுக்குப் பிடிக்கும். எனவே, அப்படியான இடங்களில் முட்டை இடும். தட்டுக்கள், இரும்புத்தகடுகளை வைத்து கரப்பானைப் பெருக்குகின்றனர். கரப்பானில் புரதச் சத்து அதிகம் உள்ளதாம்.

சீனா மற்றும் தென்கொரிய பல்கலைக்கழகங்களில் கரப்பான் பூச்சியைக் கொண்டு பலவிதமான ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அணு கதிர்வீச்சைக்கூட தாங்கும் சக்தி உள்ள கரப்பான் மூலம் புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சிகளும் இந்த ஆராய்ச்சிகளின்மூலம் நடைபெற்று வருகின்றன.

# பென்சில், பேனா வைக்கும் 'ஸ்டேன்ட்'

*உங்களுக்கு வித்தியாசமான கைவேலையொன்றை செய்வதற்கு இன்று கற்றுக்கொடுக்கவுள்ளோம். இதோ இப்போதே ஆயத்தமாகிக்கொள்ளுங்கள். பாடம் கற்கும் மேசையை ஆலங்காரப்படுத்திக்கொள்வதற்கும், நித்தமும் அங்கும் இங்கும் என ஒவ்வொரு இடத்தில் சிதறிக் கிடக்கும் பென்சில், பேனா, கத்தரிக்கோல் போன்ற கற்றல் உபகரணங்களை ஓரிடத்தில் ஒழுங்கு முறையில் வைப்பதற்கும் 'ஸ்டேன்ட்' ஒன்றை செய்து பார்ப்போம்.*

## நீங்களே செய்யலாம்



### தேவையான பொருட்கள்:

பாவித்து முடிந்த ப்ளாஸ்டிக் போத்தல் ஒன்று. (ஷெம்பூ, பவுடர், கிரீம் போன்றவை) கத்தி, கத்தரிக்கோல், நன்றாக ஒட்டக்கூடிய **Gum** (பசை), **Gum Tape**, பென்சில்.



1. உருவத்தின் அமைப்பை அடையாளப்படுத்திக்கொண்டு போத்தலை இரண்டு பகுதிகளாக வெட்டவும். கீழ்ப்பகுதி ஆழமாக இருத்தல் வேண்டும். கத்தியொன்றினால் ஓரளவிற்கு வெட்டிய பின்னர் (உருவ அமைப்பிற்கு ஏற்ப) அதனுள் கத்தியை செருகி உருவ அமைப்பிற்கேற்ப வெட்டுவது சுலபம்.



2. வெட்டிய போத்தலின் மேல் பகுதியில் இரண்டு கைகளை வரைந்துகொள்ளுங்கள்.



3. வெட்டிய கைகளை போத்தலின் கீழ்ப்பகுதியின் இரு புறங்களிலும் ஒட்டிக் கொள்ளவும்.



4. கறுப்பு, வெள்ளை நிறத்திலான கடதாசியை வட்ட வடிவில் வெட்டி இரண்டு கண்களாக அவற்றை ஒட்டவும். கண்களின் கீழே வாயின் சிரிப்பு அடையாளமாக முக்கோண வடிவில் தாளை வெட்டி பற்களாக அவற்றை ஒட்டவும்.



5. இப்போது உங்களுக்கு சிரித்த முகத்துடனான அருமையான கார்ட்டூன் பொம்மையொன்று தயாராகி விட்டது. போத்தலின் பின்புறம் Gum Tape ஐ ஒட்டி அதனை சுவரில் தொங்குமாறு ஒட்டிக்கொள்ளவும். இப்போது இதில் பேனா, பென்சில் போன்றவற்றை நிரப்பிக் கொள்ளுங்கள்.

### மெருகூட்டுவதற்கு

இதற்கென புதிய வெவ்வேறு வர்ணங்களை பாவித்து இதனை மெருகூட்டலாம். கண்களின் அமைப்பு, சிரிப்பின் அமைப்பு ஆகியவற்றை தேவைக்கேற்ப மாற்றி அமைக்கவும் முடியும். தேவையாயின் முத்துக்கள், பூக்கள், ரேந்தை, பொத்தான் போன்றவற்றையும் உருவத்திற்கேற்ப ஒட்டி மேலும் இவற்றை அழகுபடுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ‘கிவி’ பறவையின் தோற்றத்தை ஒத்த ‘கிவி’ பழம்



நியூஸிலாந்து நாட்டின் தேசிய சின்னமாகவும் அந்நாட்டிற்கே உரிய தனித்துவமான பறவையாகவும் விளங்குவது ‘கிவி’ ஆகும். இது பறக்க முடியாத ஒரு பறவை இனமாக உள்ளது. தோற்றத்தில் இப்பறவையை ஒத்திருக்கும் ஒரு பழ வகையும் உள்ளது. இதனால், அந்தப் பழ வகையும் ‘கிவி’ என்ற பெயராலேயே அழைக்கப்படுகின்றது. அதுதான் ஆங்கிலத்தில் 'Kiwifruit' என அழைக்கப்படும் ‘கிவிப்பழம்’ ஆகும். நியூஸிலாந்து நாட்டில் இந்தப் பழச்செய்கை அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றது.

பொதுவாக, உலகளவில் நியூஸிலாந்து நாட்டு மக்கள் 'Kiwi' என்ற செல்லப்பெயராலேயே அழைக்கப்படுகின்றனர். இதன் காரணமாகவும் இந்தப் பழத்திற்கு ‘கிவி’ என்ற பெயர் வந்ததாக ஒரு கருத்தும் உண்டு. மேலும், சீனாவின் தேசிய பழமாகவும் இது உள்ளது. சீனாவில் இந்தப் பழத்தை Yang Tao என்று அழைப்பர். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சீனாவிலும் இந்தப் பழச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதனால், இந்தப் பழம் ‘சீனத்து நெல்லிக்கனி’ (Chinese Gooseberry) என்றும் அழைக்கப்படுகின்றது. தற்போதளவில் இந்தப் பழச்செய்கையானது, நியூஸிலாந்து, சீனா உட்பட; சிலி, பிரான்ஸ், இத்தாலி, கிறீஸ் போன்ற நாடுகளிலும் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த பழத்தில் எமது உடலுக்குத் தேவையான விற்றமின்கள், தாதுப்பொருட்கள், புரதம், நீர்ச்சத்து, காபோஹைட்ரேட் போன்ற சத்துக்கள் நிறைந்து காணப்படுகின்றன. விற்றமின் A, C, E, K போன்றவை அதிகளவில் அடங்கியுள்ளன. இதனால், எமது உடலில் நோய் எதிர்ப்புச்சக்தியை அதிகரிக்கும் ஆற்றல் கிவிப்பழத்திற்கு உண்டு என மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும், இப்பழத்தில் அதிகளவு நார்ச்சத்தும் அடங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்த நார்ச்சத்தானது, மலச்சிக்கல் ஏற்படாமல் தடுத்தல், புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய தீய ரசாயனங்களை அகற்றல் மற்றும் அவற்றுக்கு எதிர்ப்புத்தன்மையைக் காட்டல் போன்ற சிறப்புத் தன்மைகளை உள்ளடக்கியுள்ளது. ஃபோலிக் அமிலம், ஒமேகா 3 கொழுப்பமிலம் என்பனவும் இப்பழத்தில் அடங்கியுள்ளன. இந்த அமிலங்கள் பிள்ளைகளின் மூளை வளர்ச்சியைத் தூண்டுவதாகவும் ஞாபகசக்தியை அதிரிப்பதாகவும் உள்ளன.

இருதயத்தின் சீரான இயக்கத்திற்கும் குருதி அழுத்தத்தை சீராக வைத்திருக்கவும் உடற்கலங்களை வளவளப்புத் தன்மையுடன் வைத்திருக்கவும் உதவுகின்ற பொட்டாசியம் தாதுப்பொருளும் கிவிப்பழத்தில் அடங்கியுள்ளது. இது தவிர, உடலுக்கு நன்மையளிக்கும் மெங்கனீஸ், இரும்பு, மக்னீசியம் போன்ற தாதுப்பொருட்களும் இதில் போதியளவில் அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. உடலிலுள்ள கொழுப்பைக் குறைக்கும் ஆற்றலும் இப்பழத்திற்கு உண்டெனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, உடல் எடை அதிகரித்திருப்பவர்கள் இதனை சாப்பிட்டு வந்தால், நல்ல பலன் கிடைக்கும் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

# பாலைவனச் சோலை



அனல் பறக்கும் அளவுக்கு வெயிலடிக்கும் பாலைவனங்களில்கூட, சில இடங்களில் பச்சைப் பசேலென மரங்கள் வளர்ந்திருக்கும் குளிர்ச்சியான சோலைகளைக் காணலாம். இது எப்படி சாத்தியம் என்று தெரியுமா? அதாவது, பாலைவனத்தின் சில பகுதிகளில் இயற்கையிலேயே நீரூற்றுக்கள் இருக்கும். அத்துடன், அப்பகுதிகளில் எப்போதேனும் மழை பொழியும் பட்சத்தில், அந்த நீர் பாலைவனத்தின் தாழ்வான பகுதிகளிலும் பாறை இடுக்குகளிலும் தேங்கி இருக்கும். இவ்வாறான நீர்நிலைகளைத் தேடி வரும் பறவைகள், அப்பகுதிகளில் எச்சங்களை இட்டுச் செல்லும்போது, அவற்றிலிருக்கும் விதைகள் முளைத்து, மரங்கள் வளர்கின்றனவாம்! இவ்வாறுதான் பாலைவனத்தில் சோலைகள் உருவாகின்றன.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2014, மே மாதம் 14 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday May 14, 2014.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org